...LIC LIBRARY
JAFFNA

ISSN 1391-9504




மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பிரதானி

கண்டி இராச்சியத்தின் பல்வேறு திசாவைகளின் திசாவனிகளாகத் திகழ்ந்தோர் எஹெலப்பொலையின் உறவினர்களே. சுருங்கக்கூறின், பலம்மிக்க பிரபல உறவினர்கள் பலர் அவருக்கு இருந்தனர். நாயக்கர் வம்சத்தினருக்கு எதிரான குழுவினருக்கு தலைவராக இருந்தவரும் எஹெலப்பொலைதான். அவரது அதிகாரத்தை ஒழிக்கவேண்டும் என மன்னன் எண்ணினார். எஹெலப்பொலையின் எதிரியாகிய மொல்லிகொடைக்கு இரண்டாம் பிரதானியாக பதவி உயர்வு வழங்கினார். அவ்வேளை அவர் நான்கு கோறளையின் திசாவனியாக இருந்தார்.

தனது பிரதானிகள் மீதும் பிரபுக்கள் மீதும் நம்பிக்கை கொள்ள முடியாது என ஸ்ரீவிக்ரம இராஜசிங்கன் மன்னன் புரிந்துகொண்டான். அவர்கள் இராஜதுரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என அறிந்துகொண்டதும் விசாரணையின்றி தண்டனை வழங்கினான். அவ்வாறு செய்வதன்மூலம் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என மன்னன் எண்ணினார்.


அத்துடன், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பிரதேசங்களின் எல்லையில் அமைந்திருந்த கண்டி இராச்சியத்திற்குரிய திசாவைகளில் வாழ்ந்த உள்ளூர் பொதுமக்களை மாத்திரமல்ல; பௌத்த பிக்குகள், இஸ்லாமியர்கள் உள்ளிட்ட அனைவரையும் அப்பிரதேசங்களில் இருந்து வெளியேறுமாறு கட்டளையிட்டான். இத்தகைய அநீதியான கட்டளையின் காரணமாக அநேகர் வாழ்விடங்களைக்கூட இழந்தனர். இதனால், மக்களிடையே அமைதியின்மை ஏற்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

# வட துருவத்தில் பனி உருகி குறுகிய கடல் மார்க்கம் உதயம்





பண்டைய காலத்திலிருந்தே நாடுகாண் பயணிகள் பலர் ஐரோப்பாவிலிருந்து ஆசியா செல்வதற்குக் குறுகிய கடல் மார்க்கங்களைக் கண்டுபிடிப்பதில் முனைப்புடன் செயல்பட்டனர். எனினும், வட துருவத்தை முற்று முழுதாக மூடியிருந்த பனிக்கட்டியானது, அன்றிலிருந்தே இம்முயற்சிகளுக்குப் பெரும் தடையாக இருந்தது. ஆயினும், பலநூறு வருடங்களாக மனித முயற்சியால் சாத்தியப்படாமல் இருந்த வட கிழக்கு கடற்பாதை இப்பொழுது உலக மக்களுக்காக இயல்பாகவே திறந்துள்ளது. ஆக, இதற்கான காரணந்தான் என்ன?

அதாவது, புவி வெப்பமடைந்து வருவதால், உலகின் சில பகுதிகளில் மூடியிருக்கும் பனிக்கட்டிகள் உருகி வருவதே இதற்குரிய காரணமாகும். தற்பொழுது ஆசியாவிற்குச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் பாதையால் செல்லும்போது செலவாகும் காலத்தைவிடக் குறைந்தகால அவகாசத்தில் இப்புதிய வட கிழக்குப் பயணப் பாதையூடாகப் பயணிக்கக்கூடியதாக இருப்பதானது, உண்மையில் மிகச்சிறந்த வாய்ப்பாகும். எனினும், பனிக்கட்டிகள் உருகுதல், கடல் நீர் மட்டம் அதிகரித்து வருதல், தரைப்பகுதி நீரில் மூழ்குதல் போன்றவை எதிர்காலச் சவால்கள் குறித்து எமக்கு அபாய எச்சரிக்கையையே விடுக்கின்றன.

இப்புதிய குறும்பாதையினூடாக சீனாவின் கொஸ்கோ நிறுவனத்தின் 'யொன் ஷென்' எனும் கப்பலே முதன்முதலாக ஐரோப்பா செல்லும் முயற்சியில் ஈடுபட்டது. 19,000 தொன் நிறையுள்ள இக்கப்பல், ஒகஸ்ட் 12 ஆம் திகதி சீனாவின் டாலியன் எனும் இடத்திலிருந்து நெதர்லாந்தின் ரொட்டர்டேம் வரை தனது பயணத்தை ஆரம்பித்தது. இது வரலாற்றின் முக்கிய நிகழ்வாகும். ஏனெனில், தற்பொழுது நடைமுறையில் இருக்கும் தூரகிழக்கு ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்குச் செல்லும் சம்பிரதாயபூர்வமான கடல்மார்க்கமானது தென்சீனக் கடல்,மலாக்கா நீரிணை, இந்து சமுத்திரம், சுயஸ் கால்வாய், மத்தியதரைக்கடல் என்பனவற்றைக் கடந்தே ஐரோப்பாவைச் சென்றடைவதாக உள்ளது. இக்கடல்வழிப் பயணத்திற்கு பொதுவாக 48 நாட்கள் எடுக்கின்றன. ஆனால், பெரிங் நீரிணை ஊடாக வடகிழக்கு கடல் மார்க்கம் வழியாக ஐரோப்பா செல்வதற்கு மொத்தம் 35 நாட்கள் எடுக்கும். ஆக, 13 நாட்களை மீதப்படுத்தக்கூடியதாக இருக்கும். ஒரு வர்த்தக முயற்சியைப் பொறுத்தவரையில், காலத்தை மிச்சப்படுத்துவது பெரும் இலாபமாகும். அது மாத்திரமன்றி இதனால், கப்பல் போக்குவரத்துக் கட்டணமும் இதர செலவுகளும் குறையும். எனவே, வர்த்தக நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் இது பெரும் நன்மையாகும்.

ரஷ்யாவிற்கு வடக்கே மேற்கொள்ளப்படும் இப்புதிய பாதையில், பொதுவாகக் கடல் பனிக்கட்டிகளுக்கு மத்தியில் வருடத்திற்கு இரண்டு மாதங்கள் எனும் மிகக் குறுகிய கால அவகாசத்தில் மாத்திரமே பயணிக்க முடியும். எனினும், தற்போது இக்கடல் மார்க்கத்திலுள்ள பனிக்கட்டிகள் உருகி ஓடுவதால் இரண்டு மாதங்கள் மாத்திரமல்லாது அதனைவிட அதிக காலத்திற்கு இப்புதிய பாதையை வெற்றிகரமாக பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாதையில் பயணிக்க ரஷ்ய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். ரஷ்ய அரசின் தகவலின்படி, இவ்வருடம் மாத்திரம் இதுவரை 372 கப்பல்கள் இக்கடல் மார்க்கமூடாகப் பயணிக்க அனுமதி பெற்றுள்ளன.

**இரஞ்சித் ஜெயகர்**




# 'விஜய்' ஊழியரின் தந்தையார் மரணம்



விஜய் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த டி.சிவனேசனின் தந்தையார் சின்னத்தம்பி தர்மலிங்கம் (வயது 87) அவர்கள் கடந்த 09.09.2013 ஆம் திகதியன்று காலமானதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். களயிட்டி, வறுத்தலைவிளானை பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னார், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் போமனாகவும் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியின் ஆசிரியராகவும் கடமையாற்றியவராவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.09.2013 ஆம் திகதியன்று நடைபெற்றன.

அன்னாரின் குடும்பத்தினருக்கு விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் சார்பிலும் விஜய் பத்திரிகையின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

HENDALA, WATTALA
Owner Migrating
HOME FOR SALE
SWIMMING POOL
GYM
MOVIE THEATRE
TWO ENTRANCES
Rs.47 million
(or 41m for 30prchs w/hse,valued @ 65m)
Walking distance to ODEL, Lyceum,Pizza, KFC,Arpico Hemas, cargills
7,000sq.ft, 38 perches call : 077 244 8444

DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேதிக விபரங்களுக்கு
பெயர் / முகவரியை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப் பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி - 4 நான்கு
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று தமிழ் மூலம்.
@- அழகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று / மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோருக்கும் வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1800/= மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 081-2227711 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

# நாடு திரும்பினர்

இதுவரை...

சிறுவர்கள் 'ஸ்பிரே கில்லர்' மூலம் சோமாலிய கடற்கொள்ளையர்களை மயங்கி விழச் செய்து ஏனைய மாலுமிகளையும் காப்பாற்றியதன் பின்னர் தலைமை மாலுமியிடம் அதிசயக் கிரகத்தில் உள்ள ஏனைய சிறுவர்களையும் காப்பாற்றும்படி கேட்டுக்கொண்டனர். அதற்கிணங்க, வோர்னர் ரோஜர் சிறுவர்களைக் காப்பாற்றுவதற்கும் சுதன், பிரியன், அஷ்வின் மூவரும் அவரவர் நாடு திரும்புவதற்குமான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளத் தொடங்கினார்.

இனி...

''அங்கிள்! நாங்கள் எங்களது நாடுகளுக்குப் போகவேண்டும்'' என்று சுதன் பயத்துடன் கூறினான்.

''பயப்பட வேண்டாம். வோர்னர் ரோஜர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார். அவரவர் நாட்டுக்குத் தகவல் அனுப்பியாகிவிட்டது. உங்களது பெற்றோர்களிடமும் நீங்கள் பாதுகாப்பாக இருக்கின்றீர்கள் என்பதுபற்றி உறுதிபடுத்தவேண்டும். நீங்கள் உலக சாதனையை நிலைநாட்டியுள்ளீர்கள். அனைவரும் உங்களைப் பாராட்டக் காத்துக்கொண்டிருப்பார்கள். ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். தனக்குத் தெரிந்தவை மட்டுந்தான் அறிவின் எல்லை என்று ஒவ்வொருவரும் நினைப்பதால்தான் இதுபோன்ற படித்த மனிதர்களும் படுகுழியில் விழுந்துவிடுகின்றார்கள். வேகம் வேண்டும். அதில் விவேகமும் இருக்கவேண்டும். வெறித்தனம் வேறு, லட்சியம் வேறு. அதனிலும் தாழ்வு மனப் பான்மையுடன் பழிவாங்கும் உணர்வும் ஏற்பட்டுவிட்டால், இந்த விஞ்ஞானிகள் போன்று பலர் மனிதாபிமானத்தை இழந்து மிருக நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவர். எனவே, நீங்களும் இப்போது போன்று எப்போதும் விவேகத்துடன் செயற்பட வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக வாழவேண்டும்'' என்று மூவரையும் வாழ்த்தி ஆசிகொடுத்தார் தலைமை மாலுமி.

அதன்பின்னர் கரையை அடைந்த கப்பலை எதிர்நோக்கி ஊடகங்கள் காத்திருந்தன. சர்வதேச ஊடகங்கள் இந்த மூன்று சிறுவர்களையும் நேர்முகம் கண்டு ஒலி-ஒளி பரப்பின. செய்திகள் எழுதி, நிழற்படங்களுடன் பிரசுரித்தன.

அவரவர் நாடுகளில் அவர்களுக்குச் சிறந்த வரவேற்புக் காத்திருந்தது. சுதன், பிரியன் குடும்பத்தார் மட்டுமன்றி, ஊரவரும் இவர்களை வரவேற்கக் காத்திருந்தனர்.

இத்தனை அமர்க்களங்களுக் கிடையே



சிறுவர்கள் மூவரும் துக்கம் அப்பிய முகங்களோடு தத்தம் தாய்நாடு நோக்கி விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சோகத்திற்கு காரணம் இன்னும் சிறிது நேரத்தில் தாங்கள் பிரிந்து விடுவதுதான்.

அஷ்வின் இன்னும் சற்று நேரத்தில் அவனது நாட்டில் தரையிறங்கி விடுவான். சுதனும் பிரியனும் அஷ்வினையே பார்த்துக்கொண்டிருந் தார்கள். அஷ்வினும் அவர்களையே பார்த்துக்கொண்டிருந் தான். ஆனாலும், சர்வதேச வலைப்பின்னலூடாக (இன்டர்நெட்) இந்த உலகம் சுருங்கியுள்ளது. இந்நிலையில் பிரிபவர்கள் மீண்டும் சந்திக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமே!

எனவே, அந்த அதீத நம்பிக்கையில் மூவரும் அன்புடன் ஆரத்தழுவி விடைகொடுத்து, தமது தாய்நாட்டையும், பெற்றோரையும் மற்றோரையும் எதிர்கொள்ளத் தயாரானார்கள்.

(முற்றும்)

# மதியூக மரங்கொத்தி

காட்டுராஜா சிங்கத்திற்கு அன்று நல்ல பசி. எங்கு தேடியும் எந்த மிருகமும் கிடைக்கவில்லை. கடைசியாகத் தேடியலைந்து ஒரு மானைப் பிடித்தது. இருந்த பசியில் அந்த மானின் இறைச்சியை அவசர அவசரமாக உண்ண ஆரம்பித்தது சிங்கம்.

அவ்வாறு அவசரமாக உண்ணும் போது, சிங்கத்தின் தொண்டைக்குள் ஒரு எலும்பு சிக்கிக்கொண்டது. அதன் விளைவாகச் சிங்கத்தின் தொண்டை பெரிதாக வீங்கிவிட்டதால், சிங்கத்துக்கு இறைச்சியை மென்று விழுங்குவது கஷ்டமான காரியமாக இருந்தது. வலியும் அதிகமாக இருந்தது. அப்போது மரக்கிளையொன்றில் தாவிக்கொண்டிருந்த குரங்கு ஒன்றை சிங்கம் பார்த்தது. அந்தக் குரங்கிடம், ''நீ என் தொண்டையில் சிக்கியிருக்கும் எலும்பை எடுத்து எனக்கு உதவி செய். நான் உனக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டவனாக இருப்பேன்'' என்றது.

குரங்கு யோசித்தது. சிங்கத்தின் வாய்க்குள் கையை விடும்போது சிங்கம் தனது கையைக் கடித்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்தது. உடனே, ''சிங்கராஜாவே, சில காலமாக என் கண்களில் புரை நோய் இருக்கின்றது. சின்ன முள் கூட என் கண்களுக்குத் தெரிவதில்லை. எனவே, என்னால் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது'' என்று கூறிவிட்டு மரத்திலிருந்து தாவி ஓடிவிட்டது.

பின்னர் சிங்கம் கரடியொன்றிடம் உதவி கேட்டது.''நான் உங்கள் வாயில் கைவிட்டு எலும்பை எடுக்கும்போது என் கையிலுள்ள ரோமங்கள் முரடாக இருப்பதால் அவை உங்கள் வாயில் குத்தி, உங்களுக்கு அதிக வலிதான் ஏற்படும்'' என்று கூறிவிட்டு, அதுவும் ஓட்டம் எடுத்தது.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த தந்திர நரி ஒன்று சிங்கத்தைப் பார்த்து, ''அரசே! நீங்கள் துன்பப்படுவது எனக்குப் புரிகிறது. தங்கள் தொண்டையில் சிக்கியிருக்கும் எலும்பை எடுக்கக்கூடியது மரக்கொத்திப் பறவைதான். நான் உங்களை அதனிடம் அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறி, தூரத்தில் ஒரு மரத்திலிருந்த மரங்கொத்திப் பறவையிடம் சிங்கத்தை அழைத்துச் சென்றுவிட்டு விட்டு, ஓடிப்போனது அந்த நரி.

மரக்கிளையில் உட்கார்ந்திருந்த மரங்கொத்திப் பறவையிடம் சிங்கம் தனது துன்பத்தை எடுத்துக் கூறியது. அதற்கு மரங்கொத்தி, ''உங்கள் தொண்டையில் சிக்கியுள்ள எலும்பை எடுக்க நான் தயாராக உள்ளேன். ஆனால், உங்கள் அகன்ற வாய்க்குள் என் தலையை நுழைக்கத்தான் எனக்குப் பயமாக இருக்கிறது. ஒருவேளை, நீங்கள் என்னைத் தின்றுவிட்டால் நான் என்ன செய்வது?'' என்று கேட்டது.

''பயப்படாதே நண்பா, உன்னை தின்றுவிடமாட்டேன். தயவுசெய்து என்னைக் காப்பாற்று'' என சிங்கம் கெஞ்சியது.

மிகவும் பரிதாபப்பட்ட மரங்கொத்தி, அந்த சிங்கத்தை மல்லாந்து படுத்துக் கொள்ளும்படி சொன்னது. பின்னர் அது,''எதற்கும் இந்த சிங்கத்தை நம்புவதற்கில்லை' என்று நினைத்தது. எனவே, சிங்கம்



தனது வாயை திடீரென்று மூடிவிடாமல் தடுப்பதற்காக அதனுடைய மேல் தாடைக்கும் கீழ் தாடைக்கும் இடையில் சிறிய தடி ஒன்றை நிற்க வைத்துப் பின்னர் சிங்கத்தின் வாய்க்குள் தனது தலையை நுழைத்தது. தனது அலகினால் சிங்கத்தின் தொண்டையில் சிக்கியிருந்த எலும்பைத் தட்டி விழச் செய்து வெளியே எடுத்தது. அதன்பின்னர் சிங்கத்தின் வாயிலிருந்து தனது தலையை வெளியே இழுத்துக்கொண்டு தாடைகளுக்கிடையில் நிறுத்தியிருந்த சிறிய தடியையும் தட்டிவிழச் செய்துவிட்டு விர்றென்று பறந்து மரக்கிளையில் போய் உட்கார்ந்துகொண்டது. சிங்கம் மரங்கொத்திக்கு நன்றி சொல்லியது.

இதையெல்லாம் தூரத்திலிருந்து மறைந்து பார்த்துக்கொண்டிருந்த குரங்கு, கரடி, நரி ஆகியவை மரங்கொத்தியின் மதியூகத்தைப் பாராட்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலில் நேரத்தின் பயன்பாடு



மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஓர் அம்சமாக 'நேரம்' காணப்படுகின்றது. மனிதன் தன் செயற்பாடுகளை அதன் ஒழுங்கமைவின்படி செய்து முடிப்பதில் நேரம் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அவ்வாறான சிறப்பியல்புடைய நேரத்தை வீணாகக் கழிக்காமல் அதனை மிகவும் பயனுள்ளதும் பெறுமதி மிக்கதுமான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

கற்றலில் நேரம் என்பது அதன் தூண் போன்றது. நேரத்தை அடிப்படையாகக் கொண்டே கற்றல் கட்டியெழுப்பப்படுகின்றது. நேரத்தில் ஏதாவதொரு பிரச்சினை ஏற்பட்டால், அது நேரடியாகக் கற்றலில் தாக்கம் செலுத்தும். ஆகவே, வீணான செயற்பாடுகளுக்கு நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்காமல், அதனைக் கற்றலுக்குப் பயன்படுத்த வேண்டும். கற்றலுக்குச் செலவிடும் ஒவ்வொரு நேரமும் பிற்காலத்தில் பயன் அளிக்கக் கூடியது.





நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவதற்கமைய, ஒவ்வொருவருடைய கற்றலும் வித்தியாசப்படுகிறது. அந்தவகையில், மாணவர்கள் தமது செயற்பாடுகளின் முக்கியத்துவம், தேவை என்பனவற்றின் அடிப்படையில் நேரத்தை வகுத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர், அந்தந்தச் செயற்பாடுகள் மற்றும் தேவைகளை அந்தந்த நேரத்திற்குள் செய்துமுடிக்க வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்தில் ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை அக்கணமே செய்து முடிக்க வேண்டும். மாறாக, நாளை செய்வோம் என்று ஒத்திப் போடக்கூடாது. அது நாளைய நேர ஒழுங்கைப் பாதிக்கும்.



அவசியமற்ற செயற்பாடுகளுக்கு நேரத்தை வீணடிக்கக்கூடாது. அத்துடன், சிறிய செயற்பாடுகளுக்கு அதிக நேரத்தை ஒதுக்கவும் கூடாது. மேலும், நேரத்தை ஒதுக்கும்போது நாம் செய்யும் செயற்பாடுகள் பற்றிய தெளிவு அவசியம். அதனை அறிந்து நேரத்தை வகுப்பதன்மூலம் நேரம் வீணாக்கப்படுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

-எம்.ஏ.எஃப்.சப்ரானா


## "எனது இலங்கை, எனது எதிர்காலம்"
## இளவயதினருக்கான கலைத்திறன் போட்டி

ஐக்கிய நாடுகள் சபையானது (UN) இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை எட்டும் நோக்கில் இலங்கையுடன் மிக நெருக்கமாக இயங்கி வருகின்றது. இதன் மூலம் நாம் அனைவரும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை எட்டமுடியும். பின்வரும் நான்கு பிரதான தொனிப் பொருட்களின் கீழ் எமது வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

- அனைவருக்கும் உரிய வாய்ப்பினை அளிக்கவல்ல பொருளாதார செழுமை மிக்க எதிர்காலம்
- அனைவருக்கும் சிறப்பான வாழ்க்கைத் தரமும் அடிப்படைச் சேவைகளும்
- சமூகம் சார்ந்த நியாயமான, விரிவான, ஒன்றுபட்ட எதிர்காலம்
- பாதுகாப்பான வாழ்க்கைக்கு பசுமையான சூழல்

சாதகமான மாற்றத்தினையும் அபிவிருத்தியையும் உருவாக்குவதற்காக இளைஞர் சக்தியைப் பயன்படுத்த முடியும் என்பதிலும் ஐக்கிய நாடுகள் சபையானது நம்பிக்கை கொண்டுள்ளது. இலங்கையின் எதிர்காலம் தொடர்பிலான உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை மேலே குறிப்பிடப்பட்ட நான்கு தொனிப் பொருட்களின் ஏதேனும் ஒன்றின் கீழ் ஓர் கலையாக்கமாக உருவாக்குமாறு இவ்வருடம் ஐக்கிய நாடுகள் சபை உங்களை அன்போடு அழைக்கின்றது.

பங்குபற்ற தகுதியுடையவர்கள்:
பின்வரும் பிரிவுகளின் கீழ் அனைத்து இளவயதினரும் பங்குபற்ற முடியும்
- வயதெல்லை 10-16: கனிஷ்ட பிரிவு - ஓவியக் கலை (காகிதம்)
- வயதெல்லை 17-29: சிரேஷ்ட பிரிவு - ஓவியக் கலை (காகிதம்)
- வயதெல்லை 17-29: சிரேஷ்ட பிரிவு - டிஜிட்டல் (காவியக்) கலை (இலத்திரனியல் ஊடகம்)

விருதுகள்:
- ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு விருதுகளும் தமது கலைத்திறனை மேலும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.
- சிறந்த 30 கலையாக்கங்கள் ஐ.நா தினம், ஐ.நாவின் ஏனைய நிகழ்வுகள், கண்காட்சிகள் மற்றும் வெளியீடுகளில் காட்சிப்படுத்தப்படும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பங்குபற்றுவதற்கான படிமுறைகள்:
- உங்களின் கலையாக்கத்தை 30.09.2013 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எம்மை வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:
  கலைத்திறன் போட்டி - "எனது இலங்கை, எனது எதிர்காலம்"
  ஐக்கிய நாடுகள் அலுவலகம்,
  இல. 202-204, பௌத்தாலோக்க மாவத்தை,
  கொழும்பு 7.
- இலத்திரனியல் ஊடகம் மூலமான உங்கள் டிஜிட்டல் (காவிய) ஆக்கங்களை info.lk@one.un.org எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது மேலே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு இறுவட்டு ஒன்றின் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.
- உங்கள் ஆக்கங்களுடன் பெயர், முகவரி என்பவற்றையும் குறிப்பிட்டு அனுப்பவும்.
- மேலதிக தகவல்களுக்கு 011-2580691 ext: 274 எனும் தொலைபேசி இலக்கத்தில் திங்கள் முதல் வெள்ளி வரையில் மு.ப 9 மணி முதல் பி.ப 4 மணி வரை தொடர்புகளை ஏற்படுத்தலாம் அல்லது www.un.lk/news/artcomp எனும் இணையத்தளத்தை நாடவும்.

ஆக்க வடிவமைப்புக்கான நிபந்தனைகள்:
ஓவியங்கள்
- A2 காகிதம் (23.4x16.5 அங்குலம்)
- நாலா பக்கங்களிலும் 4 செ.மீ அளவிலான எல்லை
- சட்டம் (Frame) செய்திருத்தலாகாது
- பங்குபற்றுனர்கள் விரும்பிய உத்திகள், ஊடகம், வடிவமைப்பினை பயன்படுத்தலாம்.

டிஜிட்டல் ஆக்கங்கள்:
- அளவு: 800X550px
- வடிவம்: EPS & Jpeg
- கொள்ளளவு: 3MB க்கும் குறைவாக இருத்தல்
- புகைப்படங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

நியதிகளும் நிபந்தனைகளும்:
- அனைத்து படைப்புகளும் விண்ணப்பதாரியின் சுய படைப்பாக இருத்தல் வேண்டும். 18 வயதிற்குட்பட்டோரின் ஆக்கங்கள் பாடசாலை அதிபரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.
- ஒரு விண்ணப்பதாரியால் ஒரு ஆக்கம் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.
- 30.09.2013 அன்று குறித்த வயதெல்லைக்குள் அடங்குவோர் மாத்திரமே பங்குபெற முடியும்.
- விண்ணப்பிக்கப்படும் அனைத்து ஆக்கங்களும் ஐக்கிய நாடுகளுக்கு உரித்துடையதாகும். இவற்றை வெளியிடும் அல்லது பொருத்தமான இடங்களில் காட்சிப்படுத்தும் உரிமை ஐ.நாவின் இலங்கை அலுவலகத்திற்கே உரியதாகும்.
- கலையாக்கங்கள் அனைத்தும் செயற்திறன், மூல ஆக்கம், மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றினால் பரிசீலிக்கப்படும்.
- தெரிவு செய்யப்பட்ட இறுதிச் சுற்றுக்கு தேர்வாகும் விண்ணப்பதாரிகள் அவர்களின் ஆக்கங்களை உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்தும் சந்தர்ப்பங்கள் காணப்படக்கூடும்.
- இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

International Labour Organization · UN Volunteers · World Health Organization Sri Lanka · OCHA · FAO · UNFPA · UN-HABITAT · UNHCR · UNDP · UNOPS · IOM • OIM · WFP World Food Programme · unicef · UNESCO · UNAIDS

DailyMirror · The Sunday Times · விஜய் · AOD · e-wis · HNB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்காற் மின்சக்

எதிர்வரும் தசாப்தங்களில் உலகில் எரிபொருள் பற்றாக் குறை ஏற்படும் என்று கருதப்படுகின்றது. அதுபற்றிப் பேசவும்படுகின்றது. இதற்கு மாற்றீடாக வேறு எரிசக்திகள் உண்டா? என்று தற்போதளவில் பல்வேறு கண்டுபிடிப்புக் களும் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான பிரச்சினைகள் உலகில் நிலவும் நிலையிலேயே, மின்சக்தி பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு கடற்காற்று மின்சக்தி குறித்து உலகின் கவனம் திரும்பியுள்ளது.

காற்றின் உதவியுடன் இயந்திரங்களை இயக்கும் வரலாறு கி.பி முதலாம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாகின்றது. கிரேக்க பொறியியலாளரான ஹெரொன் அலெக்சாண்ட்ரியா, காற்றுச்சக்தியினால் இயந்திரங்களை இயக்குவதில் முதன்மை வாய்ந்தவராகத் திகழ்ந்துள்ளார்.

காற்றுச்சக்தியைப் பயன்படுத்தி இயந்திரங்களை இயக் கும் செயற்பாடுகள் முதன்முதலில் ஈரான் நாட்டிலேயே மேற்கொள்ளப்பட்டன. கி.பி 7 ஆம் நூற்றாண்டிலேயே இந்த நிகழ்வு நடைமுறைக்குச் சாத்தியமாகியது. காற்றின் சக்தியை பயன்படுத்திக்கொள்ளும் செயற்பாடு மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஆரம்பித்து பின்னர் ஆசியாவுக் கும் சீனாவுக்கும் பரவியது. உப்புக் கணவாயினுள் கடல் நீரைப் பாய்ச்சுவதற்காக அன்று காற்றின் சக்தி பயன்படுத் தப்பட்டது.


*1887* ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜேம்ஸ் பிளயின், காற்றில் இருந்து மின்சாரத்தினைத் தயாரிக்கக்கூடிய டர்பைன் (சுழலி- turbine) ஒன்றை உருவாக்கினார். இதன் மூலம் அவர் தனது வீட்டுக்கு மின்சார வசதியினைப் பெற் றுக்கொண்டார். *1891* இல் அவர் தனது கண்டுபிடிப்புக் கான காப்புரிமையையும் பெற்றுக்கொண்டார். எனினும், காற்றின் சக்தியினைப் பயன்படுத்தி மின்பிறப்பாக்கியினால் சிறிதளவு மின்சாரத்தினையே உருவாக்க முடிந்தது.

டென்மார்க் இனத்தவரான போல் லா கோ, இதனைவிட ஆற்றல்மிகுந்த மின்சார டர்பைனை உருவாக்கினார். அவர் அத்துடன் நின்றுவிடாது, *1904* இல் 'காற்று மின்சக்தி சமூகம்' என்ற ஓர் அமைப்பினையும் உருவாக்கினார். இத்தொழில்நுட் பம் படிப்படியாக முன்னேற்றம் அடைந்தது. அதன் பிரதிபல னாக *1920* இல் *100* கி.வொட் மின்சாரத்தைத் தயாரிக்க முடிந் தது. *1975* இல் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் காற்று மின்சக்தி தொடர்பில் ஆய்வகம் ஒன்றை நிறுவியது. இதனைத் தவிர, நாஸா நிறுவனமும் இது தொடர்பில் பலதரப்பட்ட ஆய்வுகளையும் மேற்கொண்டது.


## காற்றுச்சக்தி

'காற்றுச்சக்தி' என்பது 'அமுக்க சக்தி' ஆகும். இதனால், புவி அடுக்கில் உள்ள அழுத்தமும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் பூமியில் விழும் சூரிய ஒளி காரணமாக அது வெப்பமடைகின்றது. சூரிய ஒளி கார ணமாக வெப்பம் அடைந்த பகுதியின் காற்று மேல் நோக்கிச் செல்கின்றது. இதனால், மற்றைய பகுதியில் உள்ள காற்று அப்பகுதியை நோக்கி நகர்கின்றது. இந்த செயற்பாட்டின்மூலமே காற்று வீசுகின்றது. காற்று வீசும் போது டர்பைன் சுழலுகின்றது. இதனால், மின்சக்தி உற்பத்தி யாகின்றது. இதனடிப்படையிலேயே, டர்பைன்களை ஸ்தாபிக்கவேண்டிய இடங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

காற்று மின்சார உற்பத்திக்கு கடல் பகுதியினையே பெரும்பாலும் பயன்படுத்துவர். கடல் பரப்பை இதற் குப் பயன்படுத்திக்கொள்வது மிகவும்




இலாபகரமானதாகும். தரைப்பகுதியைவிட கடலில் இருந்து காற்று வீச்சு பலமாக இருக்கும். வீசும் காற்று காற்றுத் தடை களில் மோதாமல் நேரடியாக டர்பைனுக்கு வரும். காற்று மின்னுற்பத்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தினால் இந்த டர்பைன்கள் ஒன்றுக்கொன்று தொடர்புப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு தொடர்புறுத்தப்பட்டுள்ள டர்பைன்கள் மூலம் மத்தியநிலையத்தினூடாக தரைப்பகுதிக்கு மின்சாரம் எடுத்துச் செல்லப்படுகின்றது.

தற்போதுள்ள பாரிய கடல்சார் காற்று மின் நிலையமாக 'லண்டன் எரே' காணப்படுகின்றது. இதனூடாக ஆயிரம் மெகாவொட் மின் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த மின்நிலையத்தினை ஸ்தாபிப்பதற்கு பொறியியலாளர்களான பீட்டர் க்ரோன், மைக்கல் ஹன்டின் ஃபோர்ட், ஜென்ஸ் டைக்மன் மற்றும் இலங்கைப் பொறியியலாளரான நிமல் டி சில்வா ஆகியோர் பங்களிப்புச் செய்துள்ளனர்.



# றல் இருந்து
# தி உற்பத்தி





## கொள்ளளவு

தற்போது உலகம் முழுவதும் கடல்சார் காற்றுச்சக்தி டர்பைன்கள் சுமார் 100,000 அளவில் இயங்கி வருகின்றன. இதனூடாக 238,351 மெகாவொட் மின்சாரம் உற்பத்தியாக்கப்படுகின்றது. ஐரோப்பிய சங்கம் 100,000 மெகாவொட் மின்சாரத்தினைக் கடல்சார் காற்று மின்சாரத்தினூடாகப் பெற்றுக்கொள்கின்றது. அதற்கமைய, கடல் நடுப்பகுதியில் நிர்மாணிக்கப்படும் பாரிய டர்பைன்கள், ஐரோப்பாச் சங்கத்தின் எரிசக்தி தேவையினை நிறைவேற்றுகின்றன. அமெரிக்கா, ஜேர்மனி உட்பட உலகின் பிரபல்யமான நாடுகள் இந்த தொழில்நுட்பத்தின் மீது கவனம் செலுத்துகின்றன.

### உலகின் முன்னணி நாடுகள் கடல்சார் காற்று மின்சக்தியைப் பயன்படுத்தும் விதம்

| நாடு | கொள்ளளவு (மெகாவொட்களில்) |
|---|---|
| * சீனா | 62733 |
| * அமெரிக்கா | 46919 |
| * ஜேர்மனி | 29060 |
| * ஸ்பெய்ன் | 21674 |
| * இந்தியா | 16084 |
| * பிரான்ஸ் | 6800 |
| * இத்தாலி | 6747 |
| * ஐக்கிய ராச்சியம் | 6540 |
| * கெனடா | 5265 |
| * போர்த்துக்கல் | 4083 |
| * வேறு நாடுகள் | 32446 |
| * உலகம் முழுவதும் | 2338351 |

உலக பொருளாதார நெருக்கடியின்போது கடல்சார் காற்று மின்சக்தி குறித்து அவதானம் செலுத்தப்பட்டது. இதற்கு முக்கிய காரணம்: உற்பத்திச் செலவு குறைவாக இருப்பதாகும்.

## கொள்ளளவினைக் குறைக்கும் காரணிகள்

உலகின் சகல பாகங்களிலும் ஒரே விதத்தில் கடல்சார் காற்றுச்சக்தியினை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை. அதேவேளை, ஒவ்வொரு நாளும் ஒரே விதத்தில் காற்று வீசுவதும் இல்லை. நாட்டில் காற்று வீசும் திசை மற்றும் அதற்குப் பொருத்தமான இடம் என்பனவற்றை ஆராய்ந்து பார்த்தே இந்த மின் நிலையத்தை அமைக்க வேண்டியுள்ளது.

## பொருளாதார நலன்கள்

கடல்சார் காற்று மின் நிலையத்தினைப் பயன்படுத்தும்போது அதற்கான உற்பத்திச் செலவும் குறைவு என்பதால், மின் கட்டணம் மிகவும் குறைவாகவே இருக்கும். உதாரணமாக: பெற்றோலியத்தினைப் பயன்படுத்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்வதனைவிட, கடல்சார் காற்றுச்சக்தியினைப் பயன்படுத்துவது மிகவும் இலாபமானதாகும்.

அத்துடன், சுற்றாடல் மாசடைவு மிகவும் குறைவாகும். எரிபொருட்கள்மூலம் மின்சாரத்தினை உற்பத்திசெய்வதனைப் போன்று கழிவுகள் எதுவும் சுற்றாடலில் சேரமாட்டா. இதனால், சூழலுக்கு மிகவும் ஏற்ற முறையாக இது உள்ளது. சாதாரண நிர்மாணப் பணிகளின்போது பிரதேசத்தின் உயிர்ப்பல்வகைமை தன்மைக்கும் இடையூறு ஏற்படமாட்டாது. இதற்காக மிகவும் முன்னேறிய தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் தற்போது கிட்டியுள்ளன. மின்நிலையத்தினை அமைக்கவெனக் கடல் பகுதி பயன்படுத்தப்படுகின்றது. இதனால், காணி நுகர்வு சம்பந்தமான பிரச்சினைகளும் ஏற்படமாட்டா. அத்துடன், இந்த மின் உற்பத்தி நிலையத்தின் இயக்கமானது, அப்பகுதியில் வாழும் உயிரிகளுக்கு எந்தவிதமான பாதிப்பினையும் ஏற்படுத்த மாட்டாது.

ஒரு டர்பைன், ஓராண்டில் செயலாற்றுவதனால் கிடைக்கும் வருமானமானது 3000-5000 அமெரிக்க டொலர்களாக இருக்கும். இதனால், உலகில் உள்ள அனைத்து எரிசக்திகளைவிட அதிக பொருளாதார நலன்களை இதனூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறான மின் நிலையத்தினை நிர்மாணிக்கும்போது காற்றின் வேகத்தினை அளப்பதற்குக் கோபுரம் ஒன்று அமைக்கப்படும். வானிலை தகவல்களைச் சேகரிக்கவும் இந்த கோபுரத்தினை பயன்படுத்திக்கொள்ள முடியும். இதனூடாக துரிதகதியில் இயற்கை அனர்த்தங்கள் குறித்து அறிந்துகொள்ளவும் முடியும். அதனால், இடர் முகாமைத்துவ உபகரணமாகவும் இந்த மின்நிலைய தொகுதியினை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

**பிரியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம் (தரம் - 04) (சென்றவாரத் தொடர்ச்சி)

பெயர்: ..........................................................

03) விலைப்பட்டியலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக

| விலைப்பட்டியல் | |
|---|---|
| 1kg அரிசி | 55.00 |
| 1kg சீனி | 28.00 |
| 1kg பருப்பு | 48.00 |
| 500ml எண்ணெய் | 54.00 |

1. 2 kg அரிசி வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?................................
2. 1kg அரிசியும் 2kg சீனியும் வாங்கினால், கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு? .........................................
3. 1l எண்ணெய் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?............................
4. 250g சீனி வாங்கக் கடைக்காரரிடம் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?................................
5. 1kg அரிசியும் 500g பருப்பும் வாங்கிக் கடைக்காரரிடம் ரூபா 100 ஐக் கொடுத்தால், மிகுதியாக கிடைக்கும் பணம் எவ்வளவு? ...........................




### தரம் 4 விடைகள்

(11ஆம், 18 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

01. 3
02. 3
03. 1
04. 1
05. 2
06. 2
07. 1
08. 2
09. 2
10. 1
11. 4
12. 1
13. 2
14. 4
15. 2
16. 4
17. 3
18. 1
19. 1
20. 4

01) 1. 5.52
2. $\frac{3}{5}$
3. 5.02
4. $\frac{4}{10}$
5. 5

02) 1. தோடம்பழங்கள் 160, ஆப்பிள் பழங்கள் 28
2. 6000ml
3. 8, 12, 6
4. ஒன்றுமில்லை
5. 250m
6. 2400ml
7. 5km
8. 16
9. ரூபா 12
10. $\frac{2}{6}, \frac{3}{9}, \frac{4}{12}, \frac{5}{15}$

03) 1. ரூபா 110
2. ரூபா 111
3. ரூபா 108
4. ரூபா 7
5. ரூபா 21

## தமிழ் (தரம் - 04)

பெயர்: ..........................................................

01) சுப்பிரமணிய பாரதியார் சிறந்த புலவர். அவர் சுவை நிறைந்த பாடல்களைப் பாடியுள்ளார். எல்லோரும் அவரைப் பாரதியார் என்று அழைப்பர். அவருடைய பாடல்களைச் சிறுவர்களும் பெரியவர்களும் விரும்பிப் படிக்கின்றார்கள். பாரதியார் தமிழ்நாட்டிலே உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். அவர் இளமையிலே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அவருக்குத் தமிழிலே பற்று அதிகமாக இருந்தது.

1. பாரதியாரின் முழுப்பெயர் என்ன? ..........................................
2. அவர் எங்கே பிறந்தார்? ..........................................................
3. பாரதியார் கற்ற மொழிகள் யாவை? ...........................................
4. அவருடைய பாடல்களை யார் விரும்பிப் படிக்கின்றார்கள்? ..........................................
5. அவர் எம்மொழியில் அதிக பற்றுக் கொண்டவர்?............................
6. பிறந்தார் என்பதன் எதிர்ப்பதம் ..................................................

02) சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியம் அமைக்க

1. மிருகங்க்ள்/நீரின்றி/கானகத்தில்/அலைந்தன.

   ..............................................................................................

2. எமக்குப்/பயன்களைத்/தருகின்றன/பல்வேறு/மரங்கள்

   ..............................................................................................

03) இடைவெளியில் வரவேண்டிய சொல்லைத் தெரிவுசெய்க.

1. கண்ணன் தாகந் தீரக் குளிர் ...................................குடித்தான். (பானம், பாணம்)
2. தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ................................... நிறுத்தம் செய்தனர். (வேலை, வேளை)
3. காந்தனின் நிலையைக்கண்டு அங்குள்ள அனைவரும் மனம்............ (இரங்கினர், இறங்கினர்)
4. இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது .............................. (அரிது, அறிது)
5. காகம் அங்கும் இங்கும் அலைந்து ..............................தேடியது. (இரை, இறை)

04) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

   ..............................................................................................

2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

   ..............................................................................................

05) இடைவெளிகளை நிரப்புக

1. நாய் குரைக்கும் என்பது போலப் பாம்பு ..............................
2. தென்னை ஓலை என்பதுபோல நெல் ..............................
3. குருவிக்கூடு என்பது போலக் கறையான் ..............................
4. பாட்டன்-பாட்டி, சீமான் ..............................
5. தென்னங்கன்று போல நாய் ..............................

### தமிழ் தரம் - 4 விடைகள்

01) 1. சுப்பிரமணிய பாரதியார்
2. தமிழ்நாட்டிலுள்ள எட்டயபுரத்தில்
3. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி
4. சிறுவர்களும், பெரியவர்களும்
5. தமிழில்
6. இறந்தார்

02) 1. கானகத்தில் மிருகங்கள் நீரின்றி அலைந்தன
2. மரங்கள் எமக்குப் பல்வேறு பயன்களைத் தருகின்றன


03) 1. பானம்
2. வேலை
3. இரங்கினர்
4. அரிது
5. இரை

04) 1. ஒற்றுமை உயர்வைத் தரும்.
2. நன்றி மறத்தல் கூடாது. (நன்றி உணர்வு)


05) 1. சீறும்
2. தாள்
3. புற்று
4. சீமாட்டி
5. குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் உலகப்போரின் முதலாவது பலி!



பிரித்தானியா ஜேர்மனிக்கு எதிராக யுத்தப் பிரகடனத்தை மேற்கொண்டவுடன் முதலாம் உலகப்போர் ஆரம்பமானது. உலகின் அமைதியைத் துவம்சம் செய்த, பல மனித உயிர்களைப் பலியெடுத்த, உலகின் வளங்களை அழித்த, குரூரமான யுத்தமாக இந்த முதலாம் உலகப்போர் அமைந்தது. இந்த முதலாம் உலகப்போரில் முதலாவதாக இறந்த துரதிருஷ்டசாலி என்று யுத்த வரலாற்று அறிக்கையில் ஜோன் பார் என்பவரின் பெயர் குறிப்பிடப் பட்டிருந்தது. யுத்தம் ஆரம்பித்து மூன்றாவது வாரத்திலேயே இந்த துர்ப்பாக்கியமான சம்பவம் நிகழ்ந் தது. எனினும், யுத்த வரலாற்று நிபுணர்கள் குறிப்பிடுவதன்படி, இந்த தகவல் தவறானது என்பது டன், முதலாவது உலகப் போரின் முதலாவது பலியானது, யுத்தம் பிரகடனப்படுத் தப்பட்டு மூன்று மணித்தி யாலங்களின் பின்னர் கொல்லப்பட்டவர், 51 வயதான பிரித்தானிய ரான ஹென்றி ஹாட்லி என்கின்ற ஆசிரியரே என்று தெரிவிக்கப்படு கின்றது.



யுத்தத்துடன் நேரடித் தொடர்புகள் அற்ற இவர், ஜேர்மனின் பேர்லினிலி ருந்து இங்கிலாந்து நோக் கிச் செல்லவிருந்த புகையி ரத நிலையத்தில் வைத்து வயிற்றில் சுட்டுக் கொல் லப்பட்டார்.

இவரது கதை ஓகஸ்ட் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் நாவலாக வெளியிடப்பட் டது. அதாவது, ஜேர்மன் பிரான்சுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்த போது பேர்லினில் பாடசாலை ஒன்றில் கற்பித்துக்கொண்டிருந்த ஹென்றி ஹாட்லி, ஜேர்மனில் இருப்பதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சி, தனது தாய் நாடான பிரித்தானியாவுக்குப் புறப் பட்டார். இந்நிகழ்வு 1914 ஓகஸ்ட் 3 ஆம் திகதி இடம்பெற்றது. அன்று காலை 11 மணிக்குப் பெரிஸ் நோக் கிச் செல்லவிருந்த புகைவண்டியில் அவரும் ஒரு பயணியாக இருந்தார். புகையிரத நிலைய உணவகத்தின் பணியாளர் ஒருவருடன் முரண்பட்டுக்கொண்ட அவர், பெருங்கோபத்துடன் உணவக விறாந்தைப்பகுதிக்கு வந்தார். இதன்போது, சில ஜேர்மனிய வீரர்கள் உணவகத்தில் இருந்தனர். விறாந்தையில் இருந்த இராணுவ வீரர்களில் ஒருவரே அவரைச் சுட் டார். உளவாளி என்ற சந்தேகத்தில் அவர்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டதாக ஜேர்மனிய இராணுவத்தி னர்கள் பின்னர் தெரிவித்திருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஹாட்லி 24 மணிநேரம் தீவிர சிகிச் சைப் பிரிவில் வைக்கப்பட்டார். அவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த ஓகஸ்ட் 4 ஆம் திகதி இரவு 11 மணிக்கு இரு நாடுகளுக் கும் இடையில் உத்தியோகபூர்வ மாக யுத்தப் பிரகடனம் மேற்கொள் ளப்பட்டது. 1914 ஓகஸ்ட் 5 ஆம் திகதி விடியற்காலை 3.15 மணிக்கு அவர் உயிரிழந்தார். எதிர்பாராமல் மரணத்தைத் தழுவிய ஹென்றி ஹாட்லியின் வாழ்க்கை வரலாறு 'மிட்டின் த எனெம்' என்ற பெயரில் நாவலாக ஓகஸ்ட் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

உலகப் போரில் முதலாவதாகப் பலியானவர் என்று இதுவரை கருதப்பட்ட 'பிரைவட் ஜோன் பார்' என்பவரின் நூறாவது நினைவு தினம் அடுத்த ஆண்டு அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெல்லுங்கள்

## விஜய் உடன் TOP NEWS வழங்கும் வாரம் ஒரு iPod...




பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 25.09.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.




28.08.2013 'Top News' கேள்விக்கான விடை:

ரஷ்யா

ipod பரிசை பெறுபவர்:

எம்.என்.எஃப். நஸ்மா,
66/7, ஸாஹிரா வீதி,
மாவனல்லை.

விஜய் – TOP NEWS

இவ்வார கூப்பன் (18.09.2013)

......................................................

விடை: ..............................................

பெயர்: ..............................................

வீட்டு முகவரி: ....................................

......................................................

பாடசாலை முகவரி: ................................

......................................................

வயது: ..............................................

தொ.பே.இல: ........................................

அனுப்ப வேண்டிய முகவரி:

iPod பரிசுப் போட்டி,
'விஜய்'
த.பெ.இல: 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றல் திறன் வளர்ச்சியின் அடிப்படை

ஒருவரது கல்வியறிவு பற்றி சுருக்கமாகக் கூறுவதென்றால், அவர் படித்தல், எழுதுதல் மற்றும் குறியீட்டு அமைப்புகளைப் பயன்படுத்தத் தெரிந்திருத்தல் போன்றவையே ஆகும். அதாவது, தகவல் தொடர்பு, பேசுதல் மற்றும் கவனித்தல் ஆகிய செயற்பாடுகளின் அனைத்து அம்சங்களையும் கொண்டது. அத்துடன், தொழில்நுட்பம், கணித அறிவு மற்றும் கலாசார அறிவு போன்றவையும் அடங்குகின்றது.

அதேவேளை, எழுதுதலும் படித்தலும் பயன்பாட்டுக் கல்வியறிவைக் குறித்தாலும், கல்வியறிவு என்பது, அர்த்தம் உருவாக்குதல், நாம் வாழும் உலகைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளுதல், நாம் என்ன பார்க்கிறோம், படிக்கிறோம் மற்றும் எழுதுகிறோம் என்பதைப் பிரதிபலித்தல் மற்றும் ஒருவரின் சொந்த இயல்பார்ந்த அறிவுத்திறன் குறித்த சிந்தனையில் ஈடுபடுதல் போன்ற விளக்கங்கள் தரப்படுகின்றன. சுருக்கமாகக் கூறுவதென்றால், மொழி மற்றும் கல்வியறிவு மேம்பாடு என்பது ஒன்றுக்கொன்று தொடர்புடையது.



புகழ்பெற்ற ரஷ்ய உளவியல் நிபுணர் வகாட்ஸ்கி, "குழந்தைகள் தங்களது கைகளை வெறுமனே அப்படியும் இப்படியும் அசைப்பதானது, ஒரு முக்கியமான செயற்பாடாகும். சத்தங்களைச் சரமாகக் கோர்த்து, வார்த்தைகளை உருவாக்கும் பயிற்சியாகும். இந்தச் செய்கையானது, பிற்காலத்தில் எழுதுதல் மற்றும் புத்தகங்களைப் பிடித்தல் போன்ற கட்டுப்பாடான செயல்பாடுகளுக்கு இட்டுச் செல்கிறது.மேலும், பேச்சு வடிவங்களில் ஒரு குழந்தை பெறும் நிபுணத்துவமே, அதனுடைய சிந்தனையின் அடிப்படை வடிவங்களாகின்றன. இதன் மூலம், ஒரு குழந்தையின் பேச்சை, அதன் உள்ளார்ந்த திறன் வளர்ச்சியுடன் சம்பந்தப்படுத்தலாம்'' என்கிறார்.

(தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5344
எஸ்.எஃப்.ஸீபா, கொடபிடிய, அக்குறஸ்ஸ.


அங். இல: 5345
எம்.நபீல், தலுவகொட்டுவ, கொச்சிக்கடை.


அங். இல: 5346
இ.றிதன், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.


அங். இல: 5347
எஃப்.ரிஸ்லா, ரம்புக்கண வீதி, மாவனல்லை.


அங். இல: 5348
எஃப்.ஹப்ஸா, எழுவிலை, பாணந்துறை.


அங். இல: 5349
றொ.சரண்யா, நல்லூர், யாழ்ப்பாணம்.


அங். இல:5350
ஜீ.பிரணவராஜ், இறம்பைக்குளம், வவுனியா.


அங். இல: 5351
ஆ.ஆதர்ஷன், பௌத்தாலோக மாவத்தை,கொழும்பு-07.


அங். இல: 5352
வ.நிறோஜினி, வரணி வடக்கு, வரணி.


அங். இல: 5353
எம்.நஜீத், உலஹிட்டிவெல, மல்வானை.


அங். இல: 5354
ஆர்.சஃப்ராஸ், ரம்புக்கந்தான, ரிதீகம.


அங். இல: 5355
ம.குலேந்திரன், கொலப்பத்தனை, கட்டபுலா.


Dialog தொலைபேசியில் ஆங்கிலம் மூலம் SMS ஊடாக

* தினமும் அரச மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகள், IT Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்)
* ஆங்கில Proverb, Idiom மற்றும் Quote களை தினமும் பெறலாம்.
* முக்கிய செய்திகள், பொது அறிவு, புதிய கண்டுபிடிப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களைப் பெற்றுக்கொள்ளவும்.





## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர்:- ........................................
........................................
முகவரி:- ........................................
........................................
தொ.பேசி:- ........................................
பத்திரிகையின் பெயர்:- ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
........................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
**SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02**

# தெரிந்து கொள்வோம்

* இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?
  ராகேஷ் சர்மா



* இலங்கைக்கு தென்பட்ட பூரண சூரிய கிரணம் எப்போது நிகழ்ந்தது?
  1955.01.20



* அமெரிக்க சமஷ்டியில் 50 மாநிலங்கள் உள்ளன. இந்திய சமஷ்டியில் எத்தனை மாநிலங்கள் உள்ளன?
  29 மாநிலங்கள்
* பின்வரும் நூல்களின் ஆசிரியர்கள் யார்?

| | |
|---|---|
| i. கள்லோ, காவியமோ | i. மு.வரதராசன் |
| ii. செம்மீன் | ii. தகழி சிவசங்கரப் பிள்ளை |
| iii. விராகய | iii. மார்டின் விக்கிரமசிங்க |
| iv. கம்பெரலிய | iv. மார்டின் விக்கிரமசிங்க |

* பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் யார்?
  கமலேஷ் சர்மா





* உலகின் மிகப்பெரிய நீர்மூழ்கிக் கப்பல் எந்த நாட்டில் உள்ளது?
  ரஷ்யாவில்
* இலங்கையில் முதன்முதல் எப்போது மக்கள் (கல்வி கற்றோர்) வாக்குரிமையைப் பெற்றனர்!
  1910 இல்


**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Windows 8 இல் இயங்கும் கணினிகள் பாதுகாப்பற்றவையா?




Windows 8 இயங்குதளம் கொண்ட கணினிகளை இலகுவாக Hack செய்துவிட முடியும் என ஜேர்மனி நாட்டு அரசாங்க தொழில் நிறுவனங்களில் ஒன்றான German Technology Agency அண்மையில் எச்சரித் திருக்கிறது.






Windows 8 இயங்குதளமானது, Trusted Platform Module 2.0 கொண்டு வடிவமைக் கப்பட்டுள்ளது.இது கணினிகளின் பாதுகாப்புக்காக இணைக்கப்பட்டுள்ளது. இந்த TPM Chip ஆனது, கணினியைப் பயன்படுத்து வோருடைய கடவுச்சொல் மற்றும் முக்கிய தகவல் களைச் சேமித்து வைத்திருக் கும். இது Windows 8 உடன் இணையும்போது, இணை யத்தளம் மற்றும் Hardware கள் மீதான கட்டுப்பாட்டை Windows 8 இழந்துவிடுவதாகவும் இதனால் Hack செய்யப்படும் அபாயம் ஏற்பட்டுவிடுகிறது என்றும் German Technology Agency நிறுவன ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும், Microsoft நிறுவனம் இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. Windows 8 கணினியைப் பயன் படுத்துபவர்கள், தமது கணினியின் தகவல்கள் திருடப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டால், TPM Chip ஐ செயலிழக்கச் செய்துவிடலாம். அந்த வசதி Windows 8 இல் தரப்பட்டுள்ளது. பல்வேறு கட்டச் சோதனைகளில் Windows 8 பாதுகாப்பானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று தனது அறிக்கையில் Microsoft குறிப்பிட்டுள்ளது.



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# உலகின் மிக மெல்லிய தொடுதிரை விசைப்பலகை





இன்றைய நவீன உலகில் தினமும் புதுப்புதுத் தொழில்நுட்பங்கள் அறிமுகமாகிக்கொண்டே இருக்கின்றன. அந்த வரிசையில் புதியதொரு படைப்பாக அறிமுகமாகியிருப்பதுதான் மிக மெல்லிய Wireless Touchscreen Keyboard ஆகும். தற்போது இதுவே உலகின் மிக மெல்லிய Touchscreen Keyboard என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் ஆராய்ச்சியாளர்களால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த Keyboard ஆனது, 0.5mm அளவே தடிப்பானது. இதனை Tablet, Smartphone மற்றும் கணினிகளிலும் பயன்படுத்தலாம். இது சாதாரண Keyboard ஐப் போன்று எழுத்துக்களை உள்ளிடுவதற்குப் பயன்படுவதோடு, Touchscreen தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளது. இதன் Touch Delay time ஆனது, 12 மில்லி செக்கன்களைவிடவும் குறைவானதாகும். அத்துடன், இது மிகக் குறைந்தளவு மின்சாரத்தையே பயன்படுத்திக்கொள்ளும் என்பதும் இதன் சிறப்புக்களில் ஒன்றாகும்.








# Apple அறிமுகத்தில் அதிவேகக் கணினி: Mac Pro

உலகின் முன்னணிக் கணினி உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான Apple, அதிவேகமுடைய 'Mac Pro' எனும் நவீன கணினியை அறிமுகம் செய்யவிருக்கிறது. இந்த வருடம்





இடம்பெறவுள்ள 'Apple WWDC 2013' நிகழ்ச்சியில் இந்த அறிமுகம் இடம்பெறவுள்ளதாக Apple நிறுவனம் அறிவித்துள்ளது.

12 Cores Processing வலுவினைக் கொண்டதும் பிரதான நினைவகமாக DDR3 RAM களைக் கொண்டதுமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கணினியானது 40GB/s எனும் வேகத்தில் தரவுப்பரிமாற்றம் செய்யக்கூடியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உள்ள SATA வினை அடிப்படையாகக் கொண்ட SSD சேமிப்புச் சாதனங்கள், சாதாரண அளவைவிட 2.5 மடங்கு வேகம் கொண்டதாகவும் 7200rpm கொண்ட சாதனத்தைவிட 10 மடங்கு வேகத்தினைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Microsoft NOKIA



# NOKIA வை வாங்குகிறது Microsoft!

உலகின் பிரபலமான கைத்தொலைபேசித் தயாரிப்பு நிறுவனமான Nokia வை, Microsoft நிறுவனம் வாங்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மிக வேகமாக மாறிவரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு நிறுவனங்கள் போட்டி போட வேண்டிய காலகட்டம் இது என்பதால், Samsung, Sony, Apple போன்றவை Nokia வின் இடத்தை ஆக்கிரமிக்க ஆரம் பித்துவிட்டன. இந்நிலையில், நெருக்கடி யான சூழலில், தவித்துக் கொண்டிருக்கும் Nokia வை வாங்க, Microsoft முடிவு செய்துள்ளது என்பது பரபரப்புத் தகவலாக வெளியாகியிருக்கிறது. அந்தவகையில் 7.17 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு Nokia வை Microsoft வாங்கவிருக்கிறதாம்!










இதேவேளை, Nokia நிறுவனத்தின் தலைமைச் செயல் இயக்குனரான Stephen Elop, மீண்டும் தான் முன்னர் பணியாற்றிய Microsoft நிறுவனத்தில் இணைவார் என்றும் தெரிகிறது.

Microsoft இன் தற்போதைய தலைமை நிறைவேற்று அதிகாரியான Steve Ballmer விரைவில் பதவி விலக உள்ள நிலையில், அந்தப் பதவிக்கு Stephen Elop நியமிக்கப்படவும் வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Apple இற்குப் போட்டியாக Nokia வை Smartphone களத்தில் இறக்கி விடும் தீர்மானத்திலேயே Microsoft இந்த முடிவை எடுத்திருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகின்றது.

12

இங்கே வெட்டவும்




# இலவச Antivirus மென்பொருள்: NANO Antivirus

கணினி உலகை ஆட்டிப்படைக்கும் வைரஸ்களை நீக்குவதற்குப் பல்வேறு Antivirus மென்பொருட்கள் அறிமுகமாகிய வண்ணம் இருக்கின்றன. இவற்றில் சில மென்பொருட்கள் இலவசமாகக் கிடைப்பதுடன், சிலவற்றைப் பணத்திற்கும் கொள்வனவு செய்யவேண்டி இருக்கும். சில Antivirus மென்பொருட்கள் தமது அடிப்படைப் பதிப்பை இலவசமாகவும் மேலதிக சேவைகளைப் பணத்திற்கும் வழங்குகின்றன.


அந்த வரிசையில்,வைரஸ்களிலிருந்து பாதுகாப்பளிப்பதற்குத் தற்போது 'NANO Antivirus' எனும் புதிய மென்பொருளானது Beta பதிப்பாக இலவசமாக அறிமுகமாகியிருக்கிறது. இது உயர் வினைத்திறன் உடையதாகவும் காணப்படுகின்றது. Windows இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இந்த மென்பொருளானது, எந்தவிதமான வைரஸ்களிலிருந்தும் கணினியைப் பாதுகாப்பதுடன், உடனுக்குடன் கணினியை Scan செய்து பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த மென்பொருளை http://www.nanoav.ru/ எனும் இணைய முகவரிக்குச் சென்று தரவிறக்கி, குறித்த காலம்வரை இலவசமாகவே பயன்படுத்திக்கொள்ளலாம்.


# Windows 8 இல் Screenshot எளிதாக எடுக்கலாம்!

Windows 7 மற்றும் முந்தைய இயங்குதளங்களில் Screenshot எடுத்து, அவற்றினை Image File ஆக மாற்ற, Print Screen ஐ அழுத்தி, படத்தினை ஏதாவது Image Writer (Paint, Photoshop...) மென்பொருளில் Paste செய்துகொள்ள வேண்டியிருக்கும்.

ஆனால், Windows 8 இயங்குதளமானது, இதனைத் தானாகவே உருவாக்குகிறது. அதற்கு Windows Key யினை அழுத்திக்கொண்டு Print Screen Key யையும் அழுத்துங்கள். சில நொடிகள் Screen இல் உள்ள காட்சி சற்று ஒளியிழந்து, பின்னர் மீண்டும் உயிர் பெறும். அடுத்து Pictures Library யைத் திறந்து Screenshots என்ற Folder ஐத் திறக்க வேண்டும்.

அங்கு Screenshot (1) என்ற பெயரில், நீங்கள் எடுத்த Screenshot காட்சி Image File ஆக சேமிக்கப்பட்டிருக்கும். அடுத்தடுத்து எடுக்கும் படங்கள் தொடர் எண்ணுடன் பெயரிடப்படும். இந்தப் படக்கோப்பினை நீங்கள் உங்கள் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திக்கொள்ளலாம்.






# Bluetooth மூலம் இலகுவாகக் கோப்புக்களைப் பரிமாற்றம் செய்ய...


## Bluetooth File Transfer

Wireless வலையமைப்பான Bluetooth ஆனது, இன்றைய கணினி மற்றும் மொபைல் சாதன உலகில் முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்படுகின்றது.

இந்தத் தொழில்நுட்பத்தின்மூலம் இலகுவாகவும் விரைவாகவும் கோப்புக்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு 'Bluetooth File Transfer' எனும் மென்பொருள் பெரிதும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

Windows இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இம்மென்பொருளானது, Drag & Drop முறை மூலம் விரைவாகக் கோப்புக்களை பரிமாற்றம் செய்ய உதவுகின்றது. File Folder களைப் பரிமாற்றம் செய்யும் வசதியையும் இது கொண்டுள்ளதுடன், அவற்றினை முகாமைத்துவம் செய்யக்கூடியதாகவும் காணப்படுகின்றமை இதன் சிறப்பாகும். இந்த மென்பொருளை இலவசமாகத் தரவிறக்கம் செய்ய http://www.medieval.it/blueftp-pc/menu-id-70.html எனும் தளத்தை நாடுங்கள்.












**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கணினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ் பரவுதலும் அதன் பாதிப்பு அறிகுறிகளும்

கணினி ஒன்றில் வைரஸ் வந்துவிட்டால், அது கணினியின் இயக்கத்தைப் பாதிக்கும் என்பது நீங்கள் அறிந்ததே! அவ்வாறு வைரஸ் ஒன்றினால் கணினி பாதிக்கப்படும்போது அது வெளிக்காட்டும் அறிகுறிகள் எவை?




விடை:

✱ கணினி வழக்கமான வேகத்தைவிட மிக மெதுவாக இயங்கத்தொடங்கும். நமது வழமையான கட்டளைகளைப் புறக்கணிக்க ஆரம்பிக்கும். உதாரணமாக: Folder, Browser போன்றவற்றை நாம் உபயோகப்படுத்த Click செய்யும்போது இயங்காமல் இருக்கும் அல்லது சற்று நேரத்தில் Close ஆகிவிடும்.

✱ சில நிமிடங்களுக்கு ஒருமுறை Restart ஆகத்தொடங்கும். Crash ஆகிவிடும் வாய்ப்பும் உண்டு.

✱ பிரிண்டர் ஒழுங்காக இயங்காது.

✱ வழக்கத்திற்கு மாறாக Error கள் உண்டாகும்.

✱ File, Folder என்பன பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும்.


✱ பல வடிவங்களில் Menu, Dialogue box கள் தோன்றும். Pop Up Message அடிக்கடி தோன்றும்.

மேற்கூறியவை பொதுவான அறிகுறிகள். வைரஸ் Programmer கள் அவர்களின் Target எதுவோ அதற்கேற்றவாறு வைரஸ்களை உருவாக்குவார்கள். அதற்கேற்ப





கணினிகளில் பாதிப்புகள் உண்டாகும். வைரஸ்களில் பெரும்பாலானவை Trojan Horse களாகத் தான் இருக்கும். இத்தகைய வைரஸ்கள் நமது கணினிகளுக்குள் நுழைந்து, தகவல்களை நம் கணினியிலிருந்து திருடி Network வழியாக Hacker களுக்கு அளிக்கும் தன்மை உடையவை. மேலும், வைரஸ்களைப் பரப்பும் இன்னொரு வழி USB drive கள் ஆகும். ஆகவே, மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் உங்கள் கணினியில் தென்பட்டால், கணினியை வைரஸ் தாக்கியிருக்கிறது என்பதை அறிந்துகொண்டு உரிய முறையில் அவற்றை நீக்கி, கணினியையும் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களையும் பாதுகாத்துக் கொள்ளலாம். அதேபோல, இணையம் மற்றும் USB drive களைப் பயன்படுத்தும்போது, உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் செயற்பட்டால் வைரஸ் பரவுவதை முன்கூட்டியே தடுத்துவிடலாம்.








# Panasonic அறிமுகப்படுத்தும் 20" தொடுதிரையுடைய கைக்கணினி




இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான Panasonic நிறுவனமானது, 20 அங்குல தொடுதிரையினைக் கொண்ட கைக்கணினியினை (Tablet) அறிமுகப்படுத்தியுள்ளது. 'Panasonic Toughpad 4K' எனப்படும் இந்தக் கைக்கணினி, 3840 X 2560 Pixel உடையதாகக் காணப்படுகின்றது. விண்டோஸ் 8 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவும் Core i5 Processor உடன், பிரதான நினைவகமாக 16GB Ram ஆகியவற்றினையும் சேமிப்பு நினைவகமாக 128GB அல்லது 256GB இனைக் கொண்டதாகவும் இது உருவாக்கப்பட்டுள்ளது.




இதற்கான மின்கலம் தொடர்ச்சியாக 6 மணித்தியாலங்கள் வரை மின் சக்தியை வழங்கக்கூடியதாகக் காணப்படுகின்றது. இதன் விலை 6,000 டொலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்கரம்





'd' என்ற எழுத்தின் மூலம் வசனத்தைப் பூர்த்திசெய்து, உருக்களை அறிந்து நிறந்தீட்டுக.


எத்தனை வட்டங்கள் உள்ளன?



இவ்வுருவை முழுமைப்படுத்துங்கள்



இவற்றில் வித்தியாச மான இரண்டு படங்களைக் கண்டு பிடியுங்கள்.



# பேச்சாளரின் பலவீனங்கள்

## Public Speaking



ஊடக பாடநெறி 51

- சபைக்கூச்ச சுபாவம்.
- குரல் ஏற்ற இறக்கம் இன்றி ஒரே குரலில் பேசுதல்.
- நீண்டநேரம் பேசுதல்.
- மொழித்திறனின்மை.
- சபையை கவர்வதற்கான நுட்பமுறைகளை பிரயோகிக்காமை.
- மிகைப்படுத்திப் பேசுதல்.
- தவறான அல்லது உண்மைக்கு மாறான கருத்தைப் பேசுதல்.
- சொற்களஞ்சியப் பற்றாக்குறை.
- பேச்சுக்களிடையே உள்ளார்ந்த பிணைப்பு மற்றும் தொடர்பின்மை.
- தனிப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தை அவதூறாக அல்லது கேலி செய்து பேசுதல்.
- உபகரண துணைக்கருவிகள் இன்றிப் பேசுதல்.

### குழுத்தொடர்புக்கான ஊடகம்

குழுத்தொடர்பு செயன்முறையில் குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஊடகப் பயன்பாடு பற்றிய அவசியத்தன்மையை உணர்ந்துகொள்ள முடியும். சிறிய குழுவுக்கு வாய்மொழி ஊடாக வழிமுறையைப் பிரதானமாகப் பயன்படுத்த முடியும். குழு அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது சூழ்நிலைக்குப் பொருத்தமான முறைசார், முறைசாரா குழுத் தொடர்பு நிலைக்கு ஏற்பவும் ஊடகக் கருவிகளின் பயன்பாடுகள் வேறுபட்டு அமைகின்றன.

### வெகுசன அல்லது மக்கள் தொடர்பாடல்


தொடர்பாடல் வகையில் வெகுசன ஊடகங்களைப் பிரதான வழிமுறையாகக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பாடலாக மக்கள் தொடர்பியல் காணப்படுகின்றது. குறித்தவொரு நேரத்தில் பெருந்தொகை மக்கள் கூட்டத்துடன் செய்திகள், கருத்துக்கள், பொழுதுபோக்கு அம்சங்களை ஓர் ஊடகத்தின் வழியாக முன்வைப்பது மக்கள் தொடர்பியல் எண்ணக் கருவின் அடிப்படையாக அமைகின்றது.

வெகுசனத் தொடர்பாடலில் வெகுசன ஊடகம் முதன்மையானது. ஊடகம் என்பது இத்தொடர்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற சாதனங்களைக் குறிக்கின்றது.









(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் சமன்-கமல்-மாமி ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**සමන්:** **කමල් අයියේ, එන්න.. එන්න. අම්මේ කමල් අයියා ඇවිත්.**
கமல் அய்யே, என்ன... என்ன. அம்மே கமல் அய்யா எவித்.
சமன்: கமல் அண்ணா, வாருங்கள்... வாருங்கள். அம்மா கமல் அண்ணா வந்திருக்கிறார்.

**කමල්:** **මල්ලි, නිවාඩු කාලේ මොනවද කරන්නේ?**
மல்லி, நிவாடு காலே மொனவத கறன்னே?
கமல்: தம்பி, விடுமுறை நாட்களில் என்ன செய்கிறாய்?

**සමන්:** **විශේෂ මොකුත් නැහැ අයියේ.**
விஷேச மொகுத் நெஹெ அய்யே.
சமன்: விஷேடமாக எதுவும் இல்லை அண்ணா.

**කමල්:** **අපි නම් ලබන සතියේ අනුරාධපුරේ යනවා.**
அப்பி நம் லபன சதியே அநுராதபுரே யனவா.
கமல்: நாங்களென்றால் வருகிற கிழமை அநுராதபுரம் போகிறோம்.

**ඔයත් අපිත් එක්ක යන්න එනවාද?**
ஒயத் அப்பித் எக்க யன்ன எனவாத?
நீயும் எங்களோடு போக வருகிறாயா?

**සමන්:** **යන්න නම් හරි ආසයි. ඒත් අම්මා මොනවා කියයි ද දන්නේ නැහැ.**
யன்ன நம் ஹரி ஆசய். ஏத் அம்மா மொனவ கியய் த தன்னே நெஹெ.
சமன்: போகவென்றால் ஆசைதான். ஆனால், அம்மா என்ன சொல்வாரோ தெரியாது.

**කමල්:** **මම එක නැන්දාගෙන් අහන්න තමා ආවේ. නැන්දා කෝ?**
மம ஏக நெந்தாகென் அஹன்ன தமா ஆவே. நெந்தா கோ?
கமல்: நான் மாமியிடம் அதனைக் கேட்கத் தான் வந்தேன். மாமி எங்கே?

(மாமி உள்ளே இருந்து வருகிறார்.....)

**කමල්:** **නැන්දේ, අපි ලබන සතියේ අනුරාධපුරේ යනවා. මල්ලිවත් එක්කන් යන්න තාත්තා අහන්න කිවුවා.**
நெந்தே, அப்பி லபன சதியே அநுராதபுரே யனவா. மல்லிவத் எக்கன் யன்ன தாத்தா அஹன்ன கிவ்வா.
கமல்: மாமி, நாங்கள் வருகிற கிழமை அநுராதபுரம் போகிறோம். தம்பியையும் அழைத்துச் செல்ல அப்பா கேட்கச் சொன்னார்.

**සමන්:** **අනේ අම්මේ මාත් යන්නම්කෝ..?**
அனே அம்மே மாத் யன்னம்கோ...?
சமன்: ஐயோ அம்மா நானும் போகிறேனே...?

**කමල්:** **ඔව් නැන්දේ, මල්ලිව එවන්න. අපි හොඳට බලා ගන්නම්.**
ஒவ் நெந்தே, மல்லிவ எவன்ன. அப்பி ஹொந்தட்ட பலா கன்னம்.
கமல்: ஆம் மாமி, தம்பியை அனுப்பி வையுங்கள். நாங்கள் நன்றாகப் பார்த்துக்கொள்கிறோம்.

**නැන්දා:** **ආ.. එහෙනම් ගිහිල්ලා එන්නකෝ. හැබැයි පුතා හොඳට ඉන්න ඕනේ.**
ஆ... எஹெனம் கிஹில்லா என்னகோ. ஹெபெய் புதா ஹொந்தட்ட இன்ன ஓனே.
மாமி: ஆ... அப்படியென்றால் போய் வாருங்கள். ஆனால், மகன் ஒழுங்காக இருக்க வேண்டும்.

### பயிற்சி



இடைவெளிகளை நிரப்புக

1. අම්මේ කමල් ................ ඇවිත්.
2. ලබන ................ අනුරාධපුරේ යනවා.
3. එහෙනම් ................ එන්නකෝ.




இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற உடன்பாடு வாக்கியங்களை (Affirmative Sentence) எதிர்மறை வாக்கியங்களாக (Negative Sentence) மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) அவன் வங்கி முகாமையாளரைச் சந்தித்தான்.
He met the bank manager.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) அவன் வங்கி முகாமையாளரைச் சந்திக்கவில்லை.
He did not meet the bank manager.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** met- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
meet- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

| | |
|---|---|
| ✱ He met. (Affirmative)<br>அவன் சந்தித்தான். (உடன்பாடு) | ✱ He did not meet. (Negative)<br>அவன் சந்திக்கவில்லை.(எதிர்மறை) |

(இ) அவள் புதிய ஒரு படம் வரைந்தாள்.
She drew a new picture.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) அவள் புதிய ஒரு படம் வரையவில்லை.
She did not draw a new picture.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** drew- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
draw- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

| | |
|---|---|
| ✱ She drew. (Affirmative)<br>அவள் வரைந்தாள். (உடன்பாடு | ✱ She did not draw. (Negative)<br>அவள் வரையவில்லை.(எதிர்மறை) |

(உ) அது தோட்டத்துக்குள் ஓடியது.
It ran into the garden.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) அது தோட்டத்துக்குள் ஓடவில்லை.
It did not run into the garden.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** ran- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
run- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

| | |
|---|---|
| ✱ It ran. (Affirmative)<br>அது ஓடியது. (உடன்பாடு) | ✱ It did not run. (Negative)<br>அது ஓடவில்லை. (எதிர்மறை) |

(எ) அந்தப் பையன் மரத்தில் இருந்து கீழே விழுந்தான்.
The boy fell down from the tree.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) அந்தப் பையன் மரத்தில் இருந்து கீழே விழவில்லை.
The boy did not fall down from the tree.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** fell- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
fall- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்மத் திரைப்படங்களின் மன்னன்

# அல்ஃபிரட் ஹிட்ச்கொக்

உலக சினிமாவைப் புதிய பாதையில் அழைத்துச் சென்றவர் என்ற பெருமையைப் பெற்ற அல்ஃபிரட் ஹிட்ச்கொக்கின் பெயர் உலக சினிமா வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. மர்மம் நிறைந்த திகில் கதைகள் மற்றும் துப்பறியும் கதைகள் அவரது சினிமாப் படைப்புகளின் தொனிப்பொருளாயின. மௌனத் திரைப்படத்தினூடாகவே ஹிட்ச்கொக்கின் சினிமா பிரவேசம் அமைந்தது. பிரித்தானியாவில் இயக்கிய Blackmail திரைப்படம் அவரது முதலாவது கதையைக்கொண்ட திரைப்படமாகும். ஹொலிவூட்டுக்கு வந்த பின்னர் தனது பிரதான கதைப் பாணியின் அடிப்படையில் பல படைப்புகளை அவர் மேற்கொண்டார். ஹிட்ச்கொக்கின் திரைப்படப் பாணியினை 'Hitchcockian' என்கின்றனர். அவரது திரைப்படப் படைப்புகளில் சித்திரிக்கப்பட்ட சில காட்சிகள் மற்றும் சம்பவங்கள் இன்றும் திரைப்பட உலகில் பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

எத்தனையோ விருதுகளுக்கு அவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டபோதிலும், சிறந்த இயக்குனருக்கான விருது அவருக்கு ஒருபோதுமே கிடைத்திருக்கவில்லை. சுமார் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம்வரையில் சினிமாவுடன் வாழ்ந்த அவர், சிறுநீரகக் கோளாறு காரணமாக மரணத்தைத் தழுவினார்.

## 1899



ஓகஸ்ட் 13 ஆம் திகதி பிரித்தானியாவின் லண்டன் நகரின் லேடொன்ஸ்டோனில் பிறந்தார். தந்தை வில்லியம் ஹிட்ச்கொக். தாய் எமா ஹிட்ச்கொக்.

## 1914

தந்தையார் எதிர்பாராத விதமாக மரணம டைந்தார். ஹிட்ச்கொக் கல்வி செயற்பாடு களை இடைநிறுத்திக்கொண்டு, பொறியியல் நிபுணத்துவம் குறித்துக் கற்க முனைந்தார்.

## 1920



லண்டனில் இஸ்லிங்க்டன் ஸ்டூடியோவில் நிரந்தரப் பணிக்கு அமர்த்தப்பட்டார். அங்கு திரையில் பெயர் எழுதும் சந்தர்ப்பம் கிட்டியது.

## 1925

The Pleasure Garden என்ற பெயரில் தனது முதல் படத்தை இயக்குவதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஜேர்மனியில் இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டது. எனினும், வெற்றிப் பெறவில்லை.




## 1926

திகில் திரைக்கதையைக்கொண்ட தனது முதலாவது திரைப்படமான The Lodger A Story of the London Fog என்ற திரைப்படத்தை இயக்கினார். இது அவரது சினிமா வாழ்க்கையின் ஆரம்பமாக அமைந்தது.

## 1926

டிசம்பர் 2ஆம் திகதி தனது பிரத்தியேகச் செயலாளரான அல்மா ரெவ்லி என்ற பெண்மணியை மணந்தார். ஹிட்ச்கொக் கின் படைப்புகளுக்கு அவரது உதவி இன்றியமையாததாக இருந்தது.






ஹிட்ச்கொக்கின் கையொப்பம்

## 1929

ஜூன் 30 ஆம் திகதி தனது முதலாவது கதை பாணி திரைப்படத்தினைத் தயாரித்தார். Blackmail என்ற இந்தப் படைப்பானது ஹிட்ச்கொக்கின் எதிர்காலப் படைப்புகளுக்கு முன்னோடியாக அமைந்தது.

## 1934

ஹிட்ச்கொக் பிரித்தானியாவில் மேற்கொண்ட திரைப்படப் படைப்புகளில் முக்கிய இடத் தினைப் பெற்ற The Man Who Knew Too Much திரைப்படம் திரை அரங்கில் காண்பிக்கப்பட்டது.

## 1939

ஏழு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஹொலிவூட்டுக்கு வருகை தந்து திரைப்படத் தயாரிப்புகளை ஆரம்பித்தார். 1940 இல் முதலாவது திரைப்படமாக Rebecca: a gothic tale என்ற திரைப்படத்தினை இயக்கினார். இத்திரைப்படம் பெரும் வெற்றியை அடைந்தது. 11 அக்கடமி விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்க ஆரம்பித்தார்.

## 1943



திரைப்பட வாழ்வில் மிகவும் விருப்பத்திற் குரிய திரைப்படமான Shadow of a doubt என்ற திரைப்படத்தினை இயக்கினார்.

## 1945

Transatlantic Pictures என்ற பெயரில் திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார். எனினும், குறுகிய காலத்தில் அதனை நிறுத்தியும் விட்டார்.

## 1960

ஹிட்ச்கொக் என்ற பெயரில் மிகவும் வெற்றிகரமான படைப்பாக அமைந்த Psycho என்ற திரைப்படத்தை இயக்கினார்.

## 1979

பிரித்தானியாவின் நைட் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

வெளியிடப்பட்ட நினைவு முத்திரை




## 1980

ஏப்ரல் 29 இல் தனது 81 ஆவது வயதில் மரணத்தைத் தழுவினார்.



ஹிட்ச் கொக்கின் உருவச் சிலை

ஹிச் கொக்கின் திரைப்படப் படைப்பு கள் சில...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கோர் வார்ட் பற்றி அறிந்ததும் அறியாததும்





ஆசியாவில் உள்ள உலக அதிசயங்களில் முக்கியமானது அங்கோர் வார்ட் கோயில். இது கம்போடியாவில் அங்கோர் நகரில் அமைந்துள்ளது. 800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது அங்கோர் வார்ட். 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சூரியவர்மன் என்ற மன்னர்தான் இதைக் கட்டுவித்தார். அக்காலத்தில் அங்கோர் முக்கிய தலைநகராக விளங்கி வந்தது. தலைநகருக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் சூரியவர்மன் இந்தக் கோயிலை வடிவமைத்தார். இன்று அங்கோர் வார்ட் கோயில் கம்போடியாவின் தேசியக் கொடியிலும் இடம்பெற்றுள்ளது. அங்கோர் என்றால் தலைநகர். வார்ட் என்றால் கோயில் என்று பொருள். இமயமலையில் உள்ள மேருமலையை மாதிரியாக வைத்துக் கட்டப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இந்துக் கடவுள் விஷ்ணுவுக்கான கோயிலாகத்தான் இது இருந்தது. 14,15 ஆம் நூற்றாண்டுகளில் அந்தக் கோயில் பௌத்தர்களின் கைக்கு மாறியது. பின்னர் புத்தர் கோயிலானது. தற்போது மீண்டும் அது இந்துக் கோயில்தான் என ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

த.மதுறன், மு/புது மத்.கல்லூரி., புதுக்குடியிருப்பு.




## எமது நாடு

எமது நாடு இலங்கை. இது கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இலங்கை இந்து சமுத்திரத்தின் 'முத்து' என வர்ணிக்கப் படுகிறது. எமது நாட்டின் காலநிலை மனித வாழ்வுக்கு உகந்ததாகும். மலைநாட்டுப் பகுதிகளில் குளிரும், வெப்பமுமான காலநிலையைக் காணக் கூடியதாக உள்ளது.



எமது நாட்டின் மிக அழகான ஆறுகள் மகாவலிகங்கை, களனி, வளவ, களுகங்கை ஆகும். வானத்தின் உயரத்திற்கு ஏற்றாற் போல் உயர்ந்து நிற்கும் மலைகளாகச் சிவனொளிபாதமலை, பிதுறுதாலகாலமலை, நமுனுகல, நக்கில்ஸ் ஆகிய மலைகள் காணப் படுகின்றன. மேலும், அருவிகளும், வாவிகளும் நீர்வீழ்ச்சிகளும் புராதனகாலசிற்பங்களுமுடைய இயற்கை எழில்மிளிர்ந்து நிற்கிறது எமது நாடு. சுற்றுலாப் பயணிகளின் மனங்கவர்ந்த இடமாகவும் எமது நாடு திகழ்கின்றது.

எம்.எஃப்.ருஹ்மா,
சென்.ஜோசப் கல்லூரி, மஸ்கெலியா.

## நூலகம்



பூக்கள் நிறைந்த தோட்டம் - அதுதான்
நூலகத்தின் அழகிய தோற்றம்
உடுக்கள் நிறைந்த வானம் - அதுதான்
நூலகத்தின் அழகிய வண்ணம்!

பூக்களை பறிக்க போவோமா - சிறு
பூமர நிழலில் அமர்வோமா?
உடுக்களை ஆராயப் போவோமா - பெரு
நுண்ணறிவினை நாம் பெறுவோமா?

பூ வாசனை கொண்ட தோட்டமடா - இது
பிரகாசத்தைக்கொண்ட வானமடா
வகுப்பறை ஓய்வினைக் குறைத்திடடா - நீ
இங்கு வருவதை அனுதினம் வளர்த்திடடா
இனி உன் அறிவும் ஆற்றலும் பெருகிடுமே!

எம்.ஆனந்தகுமார், தெனியாய.

## வளிக்கோளத்தின் பயன்கள்

★ உயிர்களின் நிலைத்திருப்பிற்கு உதவுகின்றது.

★ ஒளித்தொகுப்பு செயன்முறைக்குக் காரணமாகின்றது.

★ புவி மேற்பரப்பிற்கு ஒரு போர்வையாகத் தொழிற்படுகின்றது.

★ நீராவியைச் சேமித்து வைப்பதற்குத் துணையாக அமைகின்றது.

★ அமுக்கம், காற்றின் இயக்கம் என்பவற்றிற்குக் காரணமாக அமைகின்றது.

* மழைவீழ்ச்சிச் செயற்பாடுகளுக்குக் காரணமாகின்றது.

எம்.ஜே.எஃப்.சல்மா, இர/அல்-அக்ஷா மு.ம.வித்.,எஹலியகொடை.

## புத்திசாலி!

சுந்தரம் மிகுந்த அறிவாளி. அவருக்குச் சொந்தமான காளைமாடு, அவருக்கு அடுத்த வீட்டுக்காரருடைய பசுவை முட்டித்தள்ளிக் காயப்படுத்திவிட்டது. இதைக்கண்ட சுந்தரத்துக்குப் பயமாகிவிட்டது. 'பசுமாடு காயமடைந்ததற்காக அடுத்த வீட்டுக்காரன் தன்னுடன் சண்டைபோடுவதுடன் நஷ்டஈடும் கேட்பானோ?'' என்று அஞ்சினார். அதனால், அந்தப் பிரச்சினையைச் சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டும் என்று திட்டமிட்டார். உடனே அவர் அடுத்த வீட்டுக்காரனிடம் சென்றார். ''ஐயா! உம்முடைய பசு என்னுடைய காளைமாட்டை முட்டித்தள்ளிவிட்டது!'' என்று போலிக் கோபத்துடன் கூறினார்.

அடுத்த வீட்டுக்காரன் குழப்பமடைந்துவிட்டான். தன்னுடைய பசு சுந்தரத்தின் காளையை முட்டித்தள்ளிக் காயப்படுத்தியதற்காகத் தன்னிடம் சுந்தரம் நஷ்டஈடு கேட்பானோ? என்று பயந்தான் அடுத்த வீட்டுக்காரன்.

''சுந்தரம் அவர்களே! இது ஒரு சாதாரண விடயம். இரண்டு மாடுகள் சந்தித்தால் சண்டையிடுவதும், முட்டித்தள்ளிக்கொள்வதும் இயல்பான விடயம். இதைப்போய் நீங்கள் பெரிதுபடுத்தலாமா?'' என்று அடக்கமான குரலில் கூறினான். அதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்த சுந்தரம் அடுத்த வீட்டுக்காரனை நோக்கி, ''தாங்கள் கூறும் நியாயத்தை ஏற்றுக்கொள்கிறேன். இது ஒரு சாதாரண விடயம்தான். ஆனால், ஒரு விடயத்தை உங்களிடம் சொல்லியாகவேண்டும். நடைபெற்ற நிகழ்ச்சி வேறு. என்னுடைய காளை மாடுதான், உம்முடைய பசுவை முட்டித்தள்ளிக் காயப்படுத்திவிட்டது. ஆகவே, இந்த சாதாரண விடயத்தைத் தாங்கள் பெரிதுபடுத்தமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். நான் வருகிறேன்!'' என்று கூறிவிட்டு எழுந்தார். அந்த வீட்டுக்காரன் என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் திகைப்படைந்து நின்றுவிட்டான்.



## அளவுகளை அறிந்துகொள்ள...

★ வளிமண்டல அழுத்தம் - பாரோ மீற்றர்

★ பாலின் அடர்த்தி,தூய்மை - லக்டோ மீற்றர்

★ காற்றின் வேகம், திசை - அனிமா மீற்றர்

★ காற்றின் ஈரப்பதன் - ஹைக்ரோ மீற்றர்

★ சூரியக் கதிர்வீச்சு - பைர்ஹெலியோ மீற்றர்

★ திரவங்களின் அடர்த்தி - ஹைக்ரோ மீற்றர்

ப.சோபிதன்,
கிளி/கிளிநொச்சி ம.வித்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - ஸாரா


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.09.25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


**அற்லஸ் அறிவுக்கு விருந்து 435**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## இலக்கண வழுவற்ற சொற்றொடரில் கோடிடுக — 4


1. ஒரு எழுத்து/ஒரு தவறு/ ஓர் முறை
2. குழந்தை அழுதது/ குழந்தை அழுதாள்/ குழந்தை அழுகின்றான்
3. நேற்று வரும்/நாளை வந்தது/ நாளை வரும்
4. ஒவ்வொன்றாய் மலர்ந்தது/ ஒவ்வொன்றாய் மலர்ந்தன/ ஒவ்வொருவரும் மலர்ந்தது

## 3 உருக்களின் எண்ணிக்கையை இணைக்க






## குறுக்கெழுத்துப் போட்டி இல. 51




### மேலிருந்து கீழ்

01. மழை விட்டபின் வானில் தோன்றும்.
02. பலசரக்கு.
04. 'எண்ணிக்கை' என்றும் அர்த்தப்படுத்தலாம். (தலைகீழ்)
06. கோடை காலம்.
07. துரியோதனனின் மாமன்.
08. மழை வருவதற்கு அறிகுறியாக வானில் தோன்றும். (தலைகீழ்)
10. 'மிகவும்' எனும் பொருளைத் தரும் அடைமொழி. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. மல்லிகையில் ஒரு வகை.
03. பறவை இனமொன்று. (மாறியுள்ளது)
05. எல்லாளனுடன் போரிட்டவன்.
06. முருகனின் ஆயுதம். (மாறியுள்ளது)
08. சிறிதானாலும் காரம் பெரிது.
09. காடும் காடு சார்ந்த இடமும்.
10. மார்கழியில் பொழியும்.


### குறுக்கெழுத்துப் போட்டி இல.50 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 சா | த் | 3 தி | ய | ம் |
| 4 து | தி | | றை | | 5 நா |
| | | 6 கி | | 7 ம | |
| 8 கு | ண் | ட | ல | கே | 9 சி |
| ள | | ங் | | 10 ச | ரி |
| ம் | | கு | | ன் | |


## விடை தருக — 5

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள உயிர் எழுத்துக்கள் எத்தனை? ..............................
2. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றைத் தருக. ..............................
3. ஞாயிற்றுத் தொகுதியில் உயிர்கள் வாழும் கோள் எது? ..............................
4. தானிய வகைகள் இரண்டு தருக. ..............................

## இடைவெளிகளை நிரப்புக — 2





## உருவை அவதானித்து, பொருத்தமான சொல்லில் ✓ அடையாளமிடுக — 1





## அறிவுக்கு விருந்து - 432 விடைகள்

போட்டி: 02




போட்டி: 03



போட்டி: 04

1. ஈரான் - தெஹ்ரான்
2. ஸ்பெய்ன் - மெட்ரிட்
3. பல்கேரியா - சொஃபியா
4. உகண்டா - கம்பாலா
5. கியூபா - ஹவானா

போட்டி: 05

01. கம்மாளன்
02. சாமை
03. நட்பு
04. விட்டை

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 432 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ரா.ரிஸ்னுகலா, உடபாகை.

**போட்டி: 02**
ஏ.பரீதுல்லா, பெரியமுல்லை.

**போட்டி: 03**
எஸ்.டினுஷான், மட்டக்களப்பு.

**போட்டி: 04**
ஏ.டினோத், கல்முனை.

**போட்டி: 05**
ம.மைமுன், மூதூர்-07.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எஃப்.இஸ்ரா, அட்டாளைச்சேனை -06.
- ஆர்,பாரதகண்ணன், கொழும்பு-15.
- யு.கேமினா, குருக்கள்மடம்.
- எம்.இஜ்லான், கிரியங்கல்லி.
- ருகையா ஹசன், வெள்ளவத்தை.
- ஏ.சாரா, தொட்டவத்தை.
- அ.சாகித்தியா, நட்டாங்கண்டல்.
- கே.அவனீஷ், மொறட்டுவை.
- டி.அபிஷேக், ஹாலி எல.
- எம்.பஸால், மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு




மட்டக்களப்பு- கல்லடியைச் சேர்ந்த கேசவமூர்த்தி-குமுதினி தம்பதியரின் செல்வப் புதல்வன் கே.ஷசாங்கன், தனது ஒன்பதாவது பிறந்தநாளை 16.09.2013 அன்று கொண்டாடினார். இவரை பெற்றோர், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் திருச்செந்தூர் முருகன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: காந்தி பெரியப்பா)



வட்டவளை-மவுண்ட்ஜின் தோட்டத்தைச் சேர்ந்த எஸ்.கண்ணன்-சுபாஷினி தம்பதியரின் செல்வப் புதல்வன் சிது, தனது 13 ஆவது பிறந்த தினத்தை 25.08.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் நண்பர்கள் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...



ஜேக்-லூயி டேவிட் (1748 -1825)

பிரான்ஸ் நாட்டு ஓவியரான ஜேக்-லூயி டேவிட், 1748 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30 ஆம் திகதி பெரிஸ் நகரில் பிறந்தார். இவர் புதுச்செவ்வியல்வாத (neo-classical) ஓவிய இயக்கத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவராகக் கருதப்படுகின்றார். தனது தந்தையின் மரணத்தின் பின்னர், அக்காலத்தில் சிறந்த ஓவியராகவும் சிறந்த ஆசிரியராகவும் விளங்கிய ஜோசப் மேரி வியனிடம் ஓவியக் கலையை கற்றுக்கொள்ள டேவிட் சேர்க்கப்பட்டார். இதன்படி, தமது 17 ஆவது வயதில் ஓவியக் கலையில் ஈடுபாடு காட்ட ஆரம்பித்தார் டேவிட்.

1775 ஆம் ஆண்டு ஜோசப் மேரி வியன், ரோம் சென்றபோது டேவிட்டும் உடன் சென்றார். அப்போது முற்போக்குச் சிந்தனை மிகுந்த இத்தாலி எழுத்தாளர்களுடனும் ஓவியக்கலைஞர்களுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. 1780 இல் ரோமில் இருந்து பெரிஸ் திரும்பியபோது, டேவிட்டின் ஓவியங்களில் புதிய பாணி உருவாகியிருந்தது.

ஓத் ஒஃப் ஹொராட்டி, சோக்ரட்டீஸின் மரணம், மராட்டின் மரணம், நெப்போலியனின் ஓவியம் எனப் பல ஓவியங்களை வரைந்தார். கடமை, தேசப்பற்று மற்றும் விடுதலைக்கான போராட்டங்களைக் கருவாகக்கொண்டமைந்த அவரது ஓவியங்கள், அரசியல் முக்கியத்துவம் கொண்டவையாக மாறின. இதனை அடுத்துப் பிரான்ஸின் முன்னணி ஓவியர்களில் ஒருவராக டேவிட் கருதப்படலானார். காலப்போக்கில் அரசியல் மாற்றங்கள் காரணமாக, பிரான்ஸிலிருந்து இடம்பெயர்ந்து பெல்ஜியம் நாட்டின் ப்ரஸல்ஸ் நகரில் குடியேறினார். இவர், 1825 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி உயிர் நீத்தார்.

ஓத் ஒஃப் ஹொராட்டி



சோக்ரட்டீஸின் மரணம்








அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



சு.ஆர்த்திகா,
வேம்படி மகளிர் உ.த.பாட.,
யாழ்ப்பாணம்.



பர்வின் நஹ்லா,
தெஹிதெனிய மு.ம.வித்.,
ஹதரலியத்த.




கிஷோரா சுதர்ஷனி,
பறகஹதெனிய தே.கல்.,
பறகஹதெனிய.




என்.தஸ்பீஹா,
அல்-மின்னாஹ் ம.ம.வித்., கம்பளை.



எம்.ரம்லா,
நீரெல்லை மு.வித்.,
அக்குறனை.




சியானா மேரி,
நல்லாயன் ம.ம.வித்., நுவரெலியா.




எம்.ரிஹான்,
மதீனா தே.பாட.,
சியம்பலாகஸ்கொடுவ.




எஃப்.சுஹைறனா,
பதுரியா மத்திய கல்., மாவனல்லை.




எஸ்.ஹரிகரன்,
கிளாஸ்கோ த.வித்., அக்கரப்பத்தனை.



சல்ஹா முனீர்,
ஆமினா ம.தே.பாட.,
மாத்தளை.




ஆயிஷா ஸஹானி,
இஹல புளியங்குளம் ம.வித்.,
மரதன்கடவல.



எஃப்.சுஹைறனா,
அல்-மின்ஹாஜ் தே.பாட.,
ஹப்புகஸ்தலாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இயற்கை வளங்களை ஏன் முகாமைத்துவம் செய்ய வேண்டும்?

நீர்வட்டம், காபன் வட்டம் போன்ற சுற்றாடல் வட்டங்களின் இருப்பு மற்றும் இயங்கு தன்மைக்கும் உணவு, நீர், மருந்து, எரிசக்தி போன்ற மனிதத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் விவசாயம், சுரங்கம், மீன்பிடி, சுற்றுலா ஆகிய தொழிற்துறைகளில் ஈடுபடுவதற்கும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும் இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்து பயன்படுத்த வேண்டும்.

# இயற்கை வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துவோம்!




## நிலம்

‘நிலம்’ என்பது தரைப்பகுதியாகும். இங்குதான் நாம் வாழ்கின்றோம். மலைகள், சமவெளி, வனாந்தரங்கள், நீர்நிலைகள் என்பன இதில் அமைந்துள்ளன.

**கிடைக்கும் நன்மைகள்:** பயிர்ச்செய்கை செய்தல், வீடுகளை அமைத்தல், பெருந்தெருக்களை அமைத்தல், நீர்த்தேக்கம் அமைத்தல், கனிய வளத்தைப் பெறுதல்.

**நிலத்தில் ஏற்படும் பாதிப்புகள்:** காடுகளை அழிப்பதனால் மண்ணரிப்பு மற்றும் மண் வளம் குறைதல், உயிரினங்களின் இருப்புக்குப் பாதிப்பு ஏற்படல்.

**நிலத்தின் சரியான முகாமைத்துவத்திற்கு:** மண் காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், காட்டுப் பயிர்ச்செய்கை, சூழலுக்கு ஏற்ற பயிர்ச் செய்கை முறைகளைப் பின்பற்றல்.



## நீர்

பூமியில் 2/3 பகுதி நீர் உள்ளது. இதில் 97 சதவீதமான பகுதி உவர்நீராகும். எஞ்சிய பகுதி நன்னீராகும்.

**கிடைக்கும் பயன்கள்:** அருந்துவதற்கு, சுகாதாரம் சம்பந்தமான பணிகளுக்கு, மீன் வளங்களைப் பெறுவதற்கு, பொருட் போக்குவரத்துக்கு, மின் உற்பத்திக்கு.

**ஏற்படும் பாதிப்புக்கள்:** நீரில் கழிவுகள் சேரல், தொழிற்சாலைகள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கென வரையறை இன்றி நீரைப் பயன்படுத்தல், நீரை வீண் விரயமாக்குதல், நீரூற்றுகள் வற்றிப்போதல்.

**நீரின் திடமான முகாமைத்துவத்திற்கு:** நீரை சிக்கனமாகப் பயன்படுத்தல், நீரில் கழிவுகள் சேர்வதைத் தடுத்தல், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பயிர்ச்செய்கைகளை அறிமுகம் செய்தல், நீர் வளப்பகுதிகளைப் பாதுகாத்தல்.

## உயிர்ப் பல்வகைமை



உயிரினங்கள் மற்றும் சுற்றாடல் தொகுதிக்கு இடையிலான பல்வகைமைத் தன்மையே ‘உயிர்ப் பல்வகைமை’ எனப்படுகின்றது. தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் இதில் அடங்கும்.

**கிடைக்கும் பயன்கள்:** எமக்குத் தேவையான தாவர உணவுகள், மருந்துகள் மற்றும் எரிசக்தியைப் பெறவும் நிழல் மற்றும் குளிர்மையைப் பெறவும் தாவரங்கள் அவசியம். முட்டை, பால் போன்ற மாமிச உணவுகளைப் பெறவும் தோல் மற்றும் ரோமங்களைப் பெறவும் விலங்குகள் அவசியம். பொருட்கள் போக்குவரத்துக்கு மாடுகள், குதிரைகள் பயன்படுத்தப்படுகின்றன. விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை போன்றவற்றிலும் உயிர்ப் பல்வகைமைத் தன்மை செல்வாக்குச் செலுத்துகின்றது.

**உயிர்ப் பல்வகைமைக்கு ஏற்படும் பாதிப்புகள்:** வாசஸ்தலங்கள் இழக்கப்படல், வனாந்தரங்கள் அழிவு, புதிய ஆக்கிரமிப்பு வகைத் தாவரங்கள் சுற்றாடலை ஆக்கிரமித்தல், காலநிலை மாற்றங்கள் ஏற்படல், உயிர்வளங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படல்.

**உயிர்ப் பல்வகைமைத்துவத்தின் திடமான முகாமைத்துவத்திற்கு:** உயிரினங்களைப் பாதுகாத்தல், அவற்றின் இருப்பிடங்களைப் பாதுகாத்தல், வனாந்தரங்களை உருவாக்குதல், மரபணு மாற்றத்தைத் தடுத்தல்.



## வளி




பூமியில் வளிமண்டலம் உள்ளது. அதில் 78 சதவீதம் நைதரசன் வாயுவும் 16 சதவீதம் ஒட்சிசன் வாயுவும் அடங்கிள்ளது. எஞ்சியவை காபனீரொட்சைட்டும் வேறு வாயுக்களுமாகும்.

**கிடைக்கும் நன்மைகள்:** உயிரினங்கள் ஒட்சிசனைச் சுவாசிக்கின்றன. சுவாசத்தின்போது மனிதன் ஒட்சிசனை உள்ளெடுத்து காபனீரொட்சைட்டை வெளியேற்றுகின்றான். தாவரங்கள் உணவுத் தயாரிப்பில் காபனீரொட்சைட்டைப் பயன்படுத்துகின்றன.


**வளியில் ஏற்படும் பாதிப்புகள்:** தொழிற்சாலைகளில் மற்றும் எரிபொருள் தகனங்களின்போது காபனீரொட்சைட், சல்பர் டயொக்சைட் மற்றும் நைட்ரஜன் டயொக்சைட் ஆகிய வாயுக்கள் வளிமண்டலத்தில் சேர்கின்றன. இதனால், வளி மாசடைகின்றது. மாசடைந்த வளியை சுவாசிக்கும்போது, சுவாசக் கோளாறுகள் மற்றும் இதர நோய்கள் மனிதருக்கு ஏற்படுகின்றன. அத்துடன், இவற்றுள் பெரும்பாலானவை பச்சை வீட்டு வாயுக்களாகும். இதனால், வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரிக்கின்றது.

**வளியின் திடமான முகாமைத்துவத்திற்கு:** வளிமண்டலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல், காடுகளை வளர்த்தல்.

கவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுச் சூழலில் ஏற்படக்கூடிய விஷங்கள்



## திடீர் விபத்து

நச்சுத்தன்மை அடைவது திடீர் விபத்தாகும். யாருக்கு எந்நேரத்தில், எவ்வாறான விபத்து ஏற்படுமென யாராலும் கூறமுடியாது. அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் பல பொருட்களில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பல்வேறு நச்சுப் பொருட்கள் காணப்படலாம். எனவே, திடீரென ஏற்படக்கூடிய இவ்வாறான விபத்துக்கள் மற்றும் அவற்றிற்கு அளிக்கக்கூடிய முதலுதவிகளைப் பற்றி அறிந்திருப்பது அவசியமாகும்.

## நச்சுத் தன்மை

பல்வேறு நச்சுத்தன்மை காரணமாக வருடந்தோறும் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளுக்குச் சிறுவர்களே அதிகமாக முகங்கொடுக்கின்றனர்.அதனால், நச்சுத்தன்மை தொடர்பான தெளிவான அறிவினைப் பெற்று, செயற்படுவதன்மூலம் இவ்விதமான விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

## வீடுகளில் காணப்படும் விபத்துக்குரிய பொருட்கள்

மருந்து வகைகள், கிருமி நாசினி, மலசலகூடத்திற்குப் பாவிக்கப்படும் ரசாயனப் பொருட்கள், மின்கலம், மண்ணெண்ணெய், ஏனைய எரிபொருட்கள், எலி மருந்து, நுளம்பு மருந்து, கிருமிகளுக்கான மருந்துகள், வாசனைப் பொருட்கள், வெண்கட்டி வகைகள் என்பனவாகும்.

## விசேட கவனம் தேவை

எவ்வாறான பொருளாக இருப்பினும் அவற்றைப் பயன்படுத்தும்போது விசேட கவனம் செலுத்தவேண்டும். தகுந்த முறையில் கவனமாக உபயோகிக்க வேண்டும். பாவனைப் பொருட்களில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும். மருந்துகளில் குறிக்கப்பட்டுள்ள அளவில், குறிப்பிட்ட வேளைகளில் உட்கொள்ளவேண்டும். பாவனையின் பின்னர் நச்சுத்தன்மையுள்ள போத்தல்கள் மற்றும் ஏனைய பொருட்களை அப்புறப் படுத்தவேண்டும்.

## மருந்து

எந்தவொரு மருந்தையும் குறிப்பிட்ட அளவிற்கும், குறிப்பிட்ட வேளைகளுக்கும் மேலதிகமாக உட்கொண்டால் விஷமாகலாம்.

## தாவரம்



எமது இல்லங்களுக்கு அருகில் பல்வேறு தாவரங்கள், பூக்கள், காய்கள், இலைகள் என்பன காணப்படலாம். அவற்றில் நாம் அறியாதவையும் இருக்கலாம். எனவே, அறியாதவற்றை உணவாகக் கொள்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

## பாம்புகளும் ஏனைய உயிரினங்களும்



வீட்டைச் சூழவுள்ள கற்குவியல், குப்பைகள், அசுத்த நீர் நிறைந்த பகுதிகள் என்பனவற்றில் சிற்சில உயிரிகள், பாம்புகள் போன்றன காணப்படலாம். இவை மனிதரைத் தீண்டும்போது விஷம் ஏற்படலாம்.

## கிருமி நாசினி அல்லது ரசாயனப் பொருட்கள்



பல்வேறு வகையான கிருமிநாசினிகளின் பாவனையின் பின்னர் சிறுவர்களுக்கு எட்டாத வகையில் புறம்பாக வைக்கவும். உணவுப் பொருட்களுடன் அவை கலந்து விடாமல் அவதானமாக இருத்தல் வேண்டும். அவற்றை சுவைத்தல், நுகர்தல் என்பனவற்றைத் தவிர்க்கவும்.

## நச்சுத்தன்மை உடலினுள் செல்லும் விதம்

வாய், தோல், சுவாசித்தல், கண்கள் என்பனவற்றின் ஊடாக நச்சுப் பொருட்கள் உடலை ஊடுருவலாம்.

## நச்சுத்தன்மை உடலை அடைந்தால் வெளிப்படும் அறிகுறிகள்

- வாய், தொண்டை என்பனவற்றில் எரிவு ஏற்படல்
- உதட்டில் புண் ஏற்படல்
- வயிற்றுவலி
- வாந்தி, வயிற்றோட்டம்
- வாயிலிருந்து அல்லது மூக்கிலிருந்து சளி வெளியேறுதல்
- மூச்சுவிடுதல் கடினமாதல்
- தோலிலும், கண்ணிலும் எரிவும் நோவும் ஏற்படல்
- நாடித்துடிப்பு கூடுதல் அல்லது குறைதல்
- தலைவலி, வலிப்பு, மயக்கம் என்பன ஏற்படல்

## விஷம் தோலில் பட்டால் செய்யவேண்டியவை...



நோயாளியை உடனடியாக அவ்விடத்திலிருந்து அப்புறப் படுத்தி, விஷம் பட்ட இடத்தைச் சவர்க்காரத்தாலும், சுத்தமான நீராலும் 15-20 நிமிடங்கள் நன்கு கழுவவும். கூடிய விரைவில் வைத்திய உதவியை நாடவும்.

## விஷம் கண்களை அடையும்போது...

பாதிக்கப்பட்ட கண்ணை 15-20 நிமிடங்கள் சுத்தமான நீரால் நன்கு கழுவவும். கண்ணை நீர் நிறைந்த பாத்திரத்தினுள் இட்டுக் கழுவுவது பொருத்தமற்றதாகும். கண்களைக் கழுவும்போது பாதிக்கப்பட்டவர் கண் இமைகளை மூடித் திறக்கும் படிகூறவும். வைத்திய ஆலோசனையின்றி எவ்வித மருந்தையோ,



எண்ணெய் வகையையோ கண்ணில் ஊற்றக்கூடாது. கண் சிவந்திருந்தால் அல்லது வீங்கி இருந்தால் உடனடியாக வைத்திய உதவியை நாடவும்.

## விஷம் சுவாசிக்கப்பட்டிருந்தால்...



நோயாளியை உடனடியாக அச் சூழலில் இருந்து அகற்றவும். அவ்வாறு செய்வதன்மூலம் மேலும் விஷம் உடலினுள் செல்வதைத் தவிர்க்கக்கூடியதாக நோயாளி நன்றாக சுவாசிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தவும். கூடிய விரைவில் வைத்திய உதவியை நாடவும்.

## விஷம் உட்கொண்டால்

விஷம் உட்கொள்ளப்பட்டிருந்தால் வாந்தி எடுக்கவிட வேண்டாம். நோயாளிக்கு உப்பு, நீர், சோடா, தேங்காய்ப்பால் என்பனவற்றைக் கொடுப்பதைத் தவிர்க்கவும். நோயாளி சுயநினைவை இழந்திருந்தால் அவரை இடது பக்கமாகத் திருப்பி, நாடியை சற்று உயர்த்தி வைக்கவும். (நோயாளியின் சுவாசத் தொகுதிக்கு இடையூறு ஏற்படாமல் இருக்கவும், குருதிச் சுற்றோட்டம் நன்கு நடைபெறவும் இது உதவி புரிகிறது) நோயாளியை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும் நச்சுத் தன்மைக்குக் காரணமான பொருளின் (தகரம், போத்தல், பக்கெட்) சிட்டையை வைத்தியரிடம் காட்டுவதன்மூலம் நச்சுத்தன்மையை இனங்கண்டு



கொள்ளவும் அதற்கான சிகிச்சையை அளிக்கவும் இலகுவாக இருக்கும்.

## அறிவுரை

அறிமுகமில்லாதவர்கள் கொடுக்கும் எவ்வித உணவுப் பொருட்களையும் உண்பதையும், குடிப்பதையும் பாடசாலை செல்லும் சிறார்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தற்செயலாக அவற்றை உட்கொண்டுவிட்டால், இது தொடர்பாகவும் பெற்றோர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

## நினைவில் கொள்ள வேண்டியவை

நச்சுத்தன்மை ஏற்பட்டால் உடனடியாக வைத்திய உதவியை நாட வேண்டும். வைத்தியரிடம் கொண்டு செல்லும்வரை விஷத்தின் தன்மைக்கு ஏற்ப சரியான முதலுதவியை மேற்கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும்.

## திடீரென ஏற்படும் நச்சுத்தன்மையும், அது தொடர்பான விபரமும்

தேசிய வைத்தியசாலை, விஷம் தொடர்பான மத்திய நிலையத்திற்கு உடன் அறிவிக்கவும். தொலைபேசி இலக்கம்: 011-2686143.

**இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1971

**13 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1971**
**ஜப்பான்**

23,758 சாரணர்கள் | Asagiri Heights



87 நாடுகள் | ஒகஸ்ட் 2- 10

ஜப்பான் நாட்டில் Asagiri Heights என்ற இடத்தில் 1971 இல் பதின்மூன்றாவது உலக சாரணர் ஜம்போரி நடைபெற்றது. இதில் 87 நாடுகளைச் சேர்ந்த 23,758 சாரணர்கள் கலந்துகொண்டனர். 'For Undertanding' என்பது பதின்மூன்றாவது உலக சாரணர் ஜம்போரியின் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. இந்த ஜம்போரியின் அமைவிடம் 'ஃப்யூஜி' மலையின் பின்னணியில் அனைவரையும் கவரும்







விதமாக அமைந்திருந்தது. ஜம்போரியின் பல நிகழ்வுகள் பிரமிப்பூட்டும் வகையில், அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஆரம்ப நாள் முதல் முடிவு நாள்வரை தட்பவெப்பநிலை அருமையாக இருந்தாலும் திடீரென ஏற்பட்ட 'தைபூன்' தாக்கி, முகாமின் சில பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன.







உடனடியாக 16,000 சாரணர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, 48 மணி நேரத்தின்பின் மீண்டும் ஜம்போரியின் திடலுக்கு அழைத்து வரப்பட்டனர். எதிர்பாராது ஏற்பட்ட இந்த இயற்கைச் சீற்றத்தைப் போர்கால அடிப்படையில் எதிர்கொண்ட ஜப்பானியச் சாரணர்களின் துணிச்சலான செயற்பாடும், அவர்களது விருந்தோம்பலும் மறக்க முடியாததாகப் பதின்மூன்றாவது உலக சாரணர் ஜம்போரி அமைந்தது.

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| ஒஸ்ட்ரியா | 10,227 | 1922 | 1912 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் யோ.கேதீசன்
SLTS BP.A.WB(SL). IAP (India)

# மூன்று தினங்கள் நடைபெற்ற தேசிய சாரணர் கபோரி

தேசிய மட்டத்திலான 10 ஆவது சாரணர் கபோரி 2013 செப்டெம்பர் 13 ஆம் திகதி ஆரம்பமாகி 15 ஆம் திகதி வரை வத்தளை புனித அந்தோனியார் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் 4,000 குருளைச் சாரணர்கள் பங்குபற்றியிருந்தனர். முதலாம் நாளன்று ஆரம்ப ஊர்வலம் நடைபெற்றதுடன், இதில் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ அவர்கள் விசேட அதிதியாகக் கலந்துகொண்டார்.

மேற்படி, தேசிய சாரணர்



**விஜய் சாரணர் உலகம்**

கபோரிக்கான பதக்கத்தினை நிமல் பெர்னாண்டோ என்பவரே வடிவமைத்துள்ளார். கபோரி தொனிப்பொருளின் அடிப்படையில் இந்தப் பதக்கம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'நாம் சுற்றுச்சூழலுக்கு அன்பு செலுத்துவோம்' என்பதே இம்முறை கபோரியின் தொனிப்பொருளாகும்.

மேற்படி, சாரணர் கபோரிக்கான ஊடக அனுசரணையை 'விஜய்' சாரணர் உலகம், விஜய மற்றும் Scouting சஞ்சிகை ஆகியன வழங்கியமைமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையில் இருநாள் சாரணர் பாசறை

**இன நல்லுறவுக்குப் பாலமாக அமையும் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையின் 130 ஆவது வருடப் பூர்த்தியினை முன்னிட்டு அக்கரைப்பற்று-கல்முனை மாவட்ட சாரணியர் சங்கம் ஒழுங்குசெய்திருந்த இரண்டுநாள் சாரணிய பாசறையின் இறுதிநாள் நிகழ்வு கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையில் நடைபெற்றது.**





கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் பிரதம அதிதியாகவும் சாய்ந்தமருது மற்றும் சாய்ந்தமருது பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான ஏ.எல்.எம்.றிசான் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் அக்கரைப்பற்று-கல்முனை மாவட்டச் சாரண ஆணையாளர் ஐ.எல்.ஏ.மஜீத் கௌரவ சாரண ஆணையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா ஆகியோர் விசேட அதிதிகளாகவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உடம்பில் அணியக்கூடிய ரொபோ ஆடை

ஜப்பானின் சைபன்டயின் திறுவனமும் ஸ்குபா பல்கலைக்கழகமும் இணைந்து 'ஹெல்' (HAL- Hybrid Assistive Limb) எனப்படும் உடம்பில் அணியக்கூடிய ஒருவகை 'ரொபோ' ஆடையொன்றைத் தயாரித்துள்ளனர். நடப்பதில் அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பவர்கள் இதனை அணிந்தால் அவர்கள் இலகுவாக நடந்து செல்லக்கூடியதாக இருக்கும். அதுமட்டுமன்றி, ஒருவரால் சுமக்கக்கூடிய சுமையைவிட கூடிய சுமையை இந்த உடையின் ஆதாரத்தில் சுமக்க முடியும். இது எவ்வாறு செயற்படுகின்றது? அதாவது குறித்த ஒரு செயலைச் செய்வதற்கு மூளையிலிருந்து பிறப்பிக்கப்படும் கட்டளையானது, இந்த ஆடையிலுள்ள தொழில்நுட்ப சமிக்ஞைகளுடாகத் தசை நார்களுக்கு அனுப்பப்படுகின்றது. இவ்வாறே இதன் செயற்பாடு நிகழ்கின்றது.

ஸ்குபா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சன்காஸி என்பவரினால் 1989 ஆம் ஆண்டிலேயே இந்த ரொபோ ஆடை பற்றிய யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்கமைய HAL ஆடையானது, HAL மற்றும் HAL5 எனும் பெயர்களில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டை அடைகையில் ஜப்பானின் 130 மருத்துவமனைகளில் 'HAL ரொபோ ஆடை' 200 அளவில் பாவனைப்படுத்தப்பட்டு வந்தது. அதுமட்டுமன்றி, ஜப்பானிற்குள் எந்தவொரு நபரும் தேவையாயின், 2000 டொலர்களுக்கு மாதாந்த வாடகைக்கு இந்த ரொபோ ஆடையைப் பெறமுடியும். இந்த ஆடையானது, அங்கீகரிக்கப்பட்ட சகலவித பாதுகாப்பு வழிமுறைகளுக்கும் அமையவே தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## ரொபோவின் செயற்பாடு




## ரொபோ ஆடையின் துணையில் செய்யக்கூடியவை



| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப மாதிரி அமைப்பு உருவாக்கப்பட்டது 1997 | ஆடையின் முழுமையான உயரம் 1600mm | மேற்புறத்தின் நிறை 23kg | கீழ்புறத்தின் நிறை 15kg |
| மின் கலத்தின் வோல்ட் 100v | மின்கலத்தின் நிறை 09kg | இடைநிறுத்தாமல் செயற்படக்கூடிய காலநேரம் மணிக்கு 2h 40min | ஆடையின் மதிப்பு ரூபா இலட்சம் 05 |

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 18, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org